888

888
4-57

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

OFFICE OF THE R...
27 NOV 1957
MADRAS

பேருளாளன்

ஸ்ரீ:

விஷய ஸூசிகை

விஷயம்		பக்கம்
1.	ஸம்பாதகரின் குறிப்புக்கள்	106
2.	கந்யாதானம். [ஸ்ரீ. உப. வித்வான், புரிசை, நடாதூர், கிருஷ்ணமாசார்ய ஸ்வாமி, திருவள்ளூர்.]	111
3.	"ஸஹதர்மசாரிணீ" [ஸ்ரீ. உப. வேதாந்த வாவதூக, வில்லிவலம் நாராயணுசார்ய ஸ்வாமி, ந்யாயாத்யாபகர், ஸ்ரீ அஹோபிலமடம் ஸம்ஸ்க்ருதகலாசாலை, மதுராந்தகம்.]	113
4.	ஒரொன்றுதானே (8) [ஸ்ரீ. உப. தி. ராமஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி, அட்வோகேட், சென்னை.]	116
5.	நூற்றெட்டுத் திருப்பதிகள்	119
6.	43-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் ஸஞ்சாரக்ரமம்	122
7.	வடுவூர் ஆராதகர் ஸ்வாமியின் நிர்யாணம்	126
8.	பஞ்சாங்கஸங்க்ரஹம்	128
9.	விண்ணுலகு விடுத்து மண்ணுலகடைந்த மாயவன் [ஸ்ரீ. உப. செங்குரிச்சி. ரங்கநாதாசாரியர், சிரோமணி, உபாத்யாயர், ஸ்ரீ அஹோபிலமடம் பாடசாலை, பாதூர்.]	129

ஸ்ரீ மாலோலமுத்ராலயத்தில்

கல்யாண பத்ரிகைகள், லெடர் ஹெட்கேள், ரசீது புத்தகங்கள்
மற்றும் தேவையான அச்சு வேலைகள் மிகச்சிறந்த முறையில்
தமிழ், ஸம்ஸ்க்ருதம், ஹிந்தி, இங்கிலீஷ் பாஷைகளில்
குறிப்பிட்ட காலத்தில் செய்து கொடுக்கப்படும்.

வெளியூர் ஆர்டர்கள் உடனுக்குடன்
கவனித்து செய்து கொடுக்கப்படும்.

மதஸ்தாபனங்களுடைய வேலைகளுக்கும் ஸம்ப்ரதாய க்ரந்தங்களை
வெளியிடுவோர்களுக்கும் தகுந்த சலுகை காட்டப்படும்.
மற்ற விபரங்களுக்கு அடியிற்கண்ட விலாஸத்திற்கு எழுதவும்.

மானேஜர், ஸ்ரீ மாலோலமுத்ராலயம்,
30, பனகல் தெரு, திருவுள்ளூர்.

Printed & Published by Sri J. Rangachariar Swami, Srikaryam, Sri Ahobilamutt, at Sri Malola Press, 30. Panagal Street, Tiruvallur. Editor Eachambadi, T. Ramaswami Aiyangar, M. A., L. T. Sri Ahobilamutt Sanskrit College, Madurantakam.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:



ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா

ஸம்புடம் 16 } ஹேவிளம்பி ௵ வைகாசி ௴ { ஸஞ்சிகை 5

'அஹோபிலே காருடசைலமத்யே
க்ருபாவசாத் கல்பிதஸந்நிதாநம் ।
லக்ஷ்ம்யா ஸமாலிங்கிதவாமபாகம்
லக்ஷ்மீந்ருஸிம்ஹம் சரணம் ப்ரபத்யே ॥'

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்.

ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஸ்ரீமந்ந்ருஸிம்ஹகருணோத்திதா ।
ஸ்ரீந்ருஸிம்ஹகடாக்ஷேண ஜீயாதாசந்த்ரதாரகம் ॥

ந்ருஸிம்ஹபக்தாநாம் கேஹே கேஹே ஸதா வஸேத் ।
ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஹ்யேஷா ந்ருஸிம்ஹப்ரியயா ஸஹ ॥

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா' என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக் கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா' எனும் பத்ரிகை, ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹாலக்ஷ்மியுடன் நித்யமாக வஸிக்கக்கடவது.]

210739.

ஸ்ரீ:

ஸம்பாதகரின் குறிப்புக்கள்

योऽन्तःप्रविश्य मम वाचमिमां प्रसुप्तां
सञ्जीवयत्यखिलशक्तिधरस्स्वधाम्ना ।
अन्यांश्च हस्तचरणश्रवणत्वगादीन्
प्राणान्नमो भगवते पुरुषाय तस्मै ॥

ஸ்ரிய:பதியான் ஸர்வேச்வரன் ஒருவனே ஸ்வதந்த்ரன். ப்ரஹ்மருத்ராதிகள் தொடங்கி புல், பூண்டுவரை ஸகல சேதநாசேதனங்களும் ஸ்வாதந்த்ர்யமற்றவைகளே. இவ்வுண்மையைத்தான் நம் நாட்டு புராதன ஆத்மீகத் தத்துவங்கள் எக்காலத்தவருக்கும் உணர்த்துகின்றன. இவ்வுண்மையை உணர முடியாத பேனாட்டினர் ஒரு காலத்தில் சுதந்திரம், சமத்துவம், ஸஹோதரத்துவம் என்றெல்லாம் கூறிக்கொண்டு பல அக்ரமங்களைச் செய்தனர். அதையனுஸரித்துவந்தவர்களின் ஸஹவாஸத்தினால் இன்றுகூட இம்மாதிரி வீண் வாதங்களைக் கூறிக்கொண்டு பலவித அதிக்ரமமான கார்யங்கள் செய்யப்பட்டு வருவதை நாம் காண்கிறோம்.

இம்மாதிரிக் கொள்கைகளின் அடிப்படை உண்மைகளை நாம் அறியாமல் இல்லை; ஒப்புக்கொள்ளாமலும் இல்லை; அநுஷ்டித்துக் காட்டாமலும் இல்லை. ஆனால் நல் வழியில் அவைகளை உபயோகிக்கிறோம். ஸமூஹ நலனுக்கு பயன் படுத்துகிறோம். தேசத்தின் ஒற்றுமையைக் காப்பாற்றுகிறோம்.

எவ்வளவு அளவில் இம்மாதிரிக் கொள்கைகள் உலகத்தில் ஸாத்யமோ அவ்வளவு அளவில்தான் அவைகளைப் பின்பற்ற முடியும், பின்பற்றி பயனடைய முடியும். 'அளவிற்கு மிஞ்சினால் அம்ருதமும் விஷம்' என்பது போல் ஒரு வரையறைக்கு உட்பட்டுத்தான் இவைகளைப் பயன்படுத்த முடியும். அதற்கு மேற்பட்டால் நாகரிகமுள்ள நாட்டை அமைக்க உதவுகிறவர்களாகமாட்டோம். காட்டிலுள்ள விலங்குகளின் தர்மத்தைப் பின்பற்றுகிறவர்களாவோம்.

இவ்வுலகுக்கு வேறுபட்ட மேலுலகில்தான் இக்கொள்கைகளின் பூர்ணமான கருத்துக்கள் குறைவுபடாத பலன்களை பெரிய அளவில் காண முடியும். இதைத்தான் வேதங்களும் அவைகளைப் பின்பற்றும் இதிஹாஸ புராணங்களும் அவைகளின் கருத்துக்களை ஆய்ந்தெடுத்த ஆழ்வாராசார்யர்களும் தங்களுடைய அனுபவமூலமாக வெளியிட்டுள்ளார்கள். லக்ஷ்மீ பதியாக இல்லாமையும் உலகம் யாவையும் ஆக்கலும், நிலைபெறுத்தலும் நீக்கலும் தவிர்த்து மற்றெல்லாவிதத்திலும் பரமாத்மாவும் ஜீவராசிகளும் ஒரேவித அனுபவத்தையும் சக்தியையும் உடையவர்கள். ஊன்றிப் பார்ப்போமானால் பரமாத்மாவின் அளவுக்கு சக்தி எந்தவித இதரரிடமும் காணமுடியுமா? எதிர்பார்ப்பதுதான் சரியாகுமா? மதிவுடைமையாகுமா? உலகஸ்ருஷ்டியில் காணப்படும் ஒவ்வொரு வஸ்துவிலும் ஒருவித விசேஷ அமைப்பு உண்டு. அது மற்றொன்றைக் காட்டிலும் வேறுபட்டதுதான். இம்மாதிரி வேறுபாடுகளுக்குள் ஒருவித ஒற்றுமையைத்தான் நமது முன்னோர்கள் கூடுமானவரை ஸம்பாதித்துள்ளார்கள். அதன் மூலமாக ஸமூஹத்தில் த்ருப்தியும் அமைதியும் நிலவின.

காலக்ரமத்தில் உலகப் போக்கில் மாறுதல் ஏற்படவாரம்பித்தது. மாறுபாடும் இயற்கைதானே. நமது மதியால் மேற்கூறிய மாறுபாடுகளை நமக்கு, நமது ஸமூஹத்திற்கு அனுகூலமான முறையில் பயன்படுத்திக்கொள்வதே புத்திசாலித்தனமாகும். அப்படிக்கின்றி ஒருவரின், ஒரு கூட்டத்தினரின் அனுகூலத்தைமட்டும் ஸம்பாதித்துக் கொடுக்கும் வகையில் உபயோகித்தால் ஸமூஹத்தின்

பொது நலன் பாதிக்கப்பட்டதாகவேதான் ஆகும். அதில் ஸந்தேஹமே இருக்கவேண்டியதில்லை. அனுபவத்தில் கண்ட உண்மை இது.

இக்கொள்கைகள் முதலில் அரசியலரங்கில் தான் தோன்றவாரம்பித்தன. அதன் முடிவு தான் உலகறிந்த விஷயமாயிற்றே. பல்லாயிரக்கணக்கான குற்றமற்ற மக்கள் உயிரிழந்தனர். அமைதியின்மை ஏற்பட்டது. ஜனங்கள் பட்ட கஷ்ட, நஷ்டங்கள் விவரித்தியலாது. இதைத் தொடர்ந்து சில நாடுகள் பொதுவுடைமைக் கொள்கை என்று கூறப்படும் ஒருவித கொள்கையையனுஸரித்து தங்கள் அரசியலை யமைத்துக் கொண்டன. அந்நாடுகளில் உண்மையான சுதந்திரம் மறைந்தது. ஸமத்துவமும், ஸஹோதரத்துவமும் பேச்சளவில்தான் நிற்கின்றன. இந்நாடுகளின் அரசியலமைப்புக்கு மாறுபட்ட அரசியலமைப்புள்ள நாடுகளில் காணப்படும் அளவுக்குக்கூட பேச்சு சுதந்திரமோ, கார்யசுதந்திரங்களோ இம்மாதிரி நாடுகளில் கிடையா என அங்கு சென்றுவந்த பெரியவர்கள் கூறுவதை நாம் கேட்டு வருகிறோம்.

உண்மை இம்மாதிரி இருக்க உலகில் உள்ள எல்லா நாடுகளிலும் அரசியல் வாதிகள் ஆந்மீகத்துறையைப் புறக்கணித்து பொருளாதாரத் துறையையே பெரிதாகக் கருதி தங்கள் மனப்போக்குப் போல் கார்யங்களைச் செய்து வருவதும் அவைகளுக்கநுகுணமாக வாதங்கள் புரிந்து வருவதும் மிகவும் வருந்தத்தக்க விஷயங்களாகும்.

ஆந்மீகத்துறையில் ஈடுபடுபவர்கள் ஸகல ஜீவராசிகளையும் ஒரே ரீதியில் நேசிக்கிறார்கள். எல்லோரும் இன்புற்றிருக்கவேண்டும் என்பதுதான் இவர்களின் கொள்கை. அதையே எக்காலமும் போற்றி வருகிறார்கள். ஆனால் பொருளாதாரத்துறையில் வெற்றி பெறவேண்டும் என்று எண்ணும் அரசியல் வாதிகளோ தங்கள் கொள்கை, தங்கள் கூட்டம் இவைகளின் நலனையே முக்யமாக மனதிற்கொண்டு அதற்குத் தக்கபடி தங்கள் கார்யங்களை வகுத்துக் கொள்ளுகிறார்கள். அவைகளில் வெற்றி பெற எதையும் செய்யத் தயங்குவதில்லை.

ஸமீபகாலத்தில் மேனாட்டினர் (ரஷ்யர்கள் ஆங்கிலேயர், அமெரிக்கர்) இவர்கள் தங்கள் நாடுகளை உயர்நிலையில் நீடிக்கவேண்டும் என்ற ஒரே கருத்தினால் அணுகுண்டு, ஜலவாயு குண்டு முதலிய அத்யுக்ரமான ஆயுதங்களை ஏராளமான பொருட்செலவில் தயார் செய்து வைத்துள்ளார்கள். மேலும் மேலும் உக்ரமான ஆயுதங்களை உத்பத்தி செய்து வருகிறார்கள். இவைகளின் சக்தியைத் தெரிந்து கொள்ளவும், ஓரளவு அந்நிய நாடுகளுக்கு பயத்தை விளைவிக்கலாம் என்ற ப்ரசார நோக்கத்துடனும் இம்மாதிரியான ஆயுதங்களைப் பரீக்ஷித்துப் பார்க்கிறார்கள். இந்தப் பரீக்ஷைகள் எங்கே நடக்கின்றன? எவ்விதம் நடத்தப்படுகின்றன? என்றெல்லாம் யோசித்துப் பார்க்கும்பொழுது நமக்கு ஒரு விஷயம் ஞாபகத்திற்கு வருகிறது. புது மருந்துகளைத் தயாரிக்கும் ஆராய்ச்சியாளர்கள் தங்கள் மருந்துகளின் சக்திகளை முதலில் வாயில்லாப் பிராணிகள் எனக் கூறப்படும் குரங்குகள், மாடுகள், இவைகளுக்குக் கொடுத்து அதன் பலாபலன்களை அறிந்து கொள்கிறார்களாம். நெருப்பின் சக்தியை அறிந்துகொள்ள தாய்க்குரங்கு குட்டிக்குரங்கின் கையைப் பிடித்திழுத்து நெருப்பின் மேல் வைத்துப் பார்க்குமாம். இதுபோலவே இந்நாட்டினர்கள் பசுபிக்மஹாஸமுத்ரத்தில் விஷகுண்டுகளை வீசி அவைகளின் நாசகாரித்தன்மையை அறிகிறார்கள். ஏன் தங்கள் நாடுகளுக்கு ஸமீபத்தில் உள்ள அட்லாண்டிக் மஹாஸமுத்ரத்தில் உள்ள தீவுகளில் இவைகளை வீசி அவைகளின் நிலவரங்களை அறியக்கூடாது என்று பலர் கூக்குரலிடுகிறார்கள். இக்கூக்குரலுக்கு யார் செவி சாய்க்கிறார்கள்? ஒருவரையும் காணோம்.

இவர்களின் வாதங்கள் உண்மையானவைகள்தான். மேனாட்டினரின் செய்கைகள் நம் நாட்டினரின் கெடுதியாக ஸம்பவிக்கின்றன. மானிடவர்க்கத்திற்கே ஒரு பெரிய அநீதி விளைவிப்பதாகும். முடிவில் உலகில் உள்ள எல்லா

நாடுகளுக்குமே அளவிடமுடியாத தீங்கைவிளை விக்கிறதாகும் என்பதெல்லாம் உண்மையே.

எந்த உலகநியாயத்திற்கும் அரசியல் வாதத்திற்கும், தர்ம ந்யாயங்களுக்கும் இம்மாதிரி சோதனைகள் கட்டுப்பட்டதாக இல்லை என்றும் இம்மாதிரி சோதனைகளின் அவசியமின்மையையும் நடத்தும் ரீதியையும் பரிசிலனை செய்ய உலக அரங்கில் உள்ள சட்ட நிபுணர்களும், நியாயவாதிகளும் உடனே ஒன்றுகூடி பரிசிலிக்கவேண்டும் என்று பெரிய மதிப்பு வாய்ந்த அரசியல் வாதிகள் (பல நாடுகளிலிருந்து) உத்கோஷிப்பதை நாம் கேட்கிறோம். இம்மாதிரியான உத்கோஷங்கள் நியாயமானவைகள் என்று நாம் கருதுகிறோம். ஆனாலும் இவர்களுடைய இதர நடவடிக்கைகளைக் காணும்பொழுது நாம் சிறிக்கவேண்டி வருகிறது.

பிறர்க்கு உபதேசம் செய்த நரி, தான் காடிப்பானையில் விழுந்தது என்றது போன்ற பண்டைக் காலத்து பஞ்சதந்திரக் கதைகள் நமக்கு ஜ்ஞாபகத்திற்கு வருகின்றன. உலக அரங்கில் நடக்கும் கார்யங்கள் எல்லாவற்றையும் தடை செய்யும் சக்தி ஸர்வேச்வரன் ஒருவனுக்கே உண்டு. ஒவ்வொரு நாட்டிலும் செல்வாக்கிலும் அதிகாரத்திலும் உள்ள பெரியவர்கள் தங்கள் நாட்டு விஷயங்களில் மட்டில் அதிகாரம் உள்ளவர்களாக இருக்கிறார்கள். அண்டைநாட்டு வ்யவஹாரங்களில் சிறிதளவுகூட அதிகாரம் உடையவர்கள் அல்ல. ஆகவே தங்கள் கொள்கைகளை வெளியுலகுக்கு எடுத்துக் கூறவேண்டியது மிகவும் அவசியமாகிறது. கூறுவது தவிர வேறு ஒன்றும் இவர்களால் செய்யவுமியலாது. பல காலம் கண்டித்துக் கொண்டேயிருந்து தங்கள் கொள்கைக்கு ஆதரவு தேடவும் முடியும், முடிகிறதுகூட. ஆனால் தங்களுடைய அதிகாரத்திற்கு உட்பட்ட கார்யங்களை நடத்தி வருவதில் எவ்விதம் நடந்துகொள்கிறார்கள் என்பதை சிறிது பார்ப்போம்.

கடவுள் பக்தி உள்ள ஒருவன் ஆலயத்தைக் கடவுளின் அருளாக எண்ணுகிறான். அதில் நம்பிக்கையை வைத்திருக்கிறான். அதன் அபிவ்ருத்தியில் ஈடுபடுகிறான். கடவுள் நம்பிக்கையில்லாதவன் ஒருவன் ஆலயத்தை நம்பாமல் இருக்கலாம். ஆனால் அதை வெறுப்பது எவ்வளவு நியாயம்? அதைத் தகர்த்துவிட முயற்சிப்பது இன்னும் எவ்வளவு தூரம் அனுமதிக்கத்தக்கது? விக்ரஹங்களை நம்பாதவன அவைகளை எவ்விதமாயினும்கருதலாம் ஆனால்நம்பிக்கையுள்ளவனின் கருவிகளாகிய அவைகளை அவமானப்படுத்துவது, உடைப்பது எவ்வளவு நியாயம்?

புராணங்களை நம்பாமல் இருக்கலாம். ஆனால் வெறுக்கலாம் என்பதும் நியாயமாகுமா? ஜாதிப் பிறிவினையை நம்பாமல் இருக்கலாம். நமது கண்ணுக்குப் புலப்படும் ஆண், பெண் வேற்றுமையைக் கூட உலக நியதி என்று நம்பாமல் இருக்கலாம். அதாவது ஆண் பெண்ணாகவும், பெண் ஆணாகவும் மாற முயற்சிக்கலாம். ஆனால் ஆண் பெண்ணையும், பெண் ஆணையும் வெறுப்பது எவ்வளவு நியாயம்? அதேபோல் ஜாதிப் பிறிவினையை நம்பாவிட்டாலும், வெறுப்பதென்பது எவ்வளவு தூரத்துக்கு தர்மமும், நியாயமும் ஆகும்.

நமது கொள்கைக்கு மற்றவர்களை இணங்க வைக்க நாம் முயற்சிக்கலாம் ஆனால் எம்மாதிரியான முறையில் என்பதை யோசித்துப் பார்க்கவேணும். அவர்களுடன் நாம் வாது புரியலாம். ஆனால் பலாத்காரத்தில் இறங்குவதென்பது பகுத்தறிவுள்ளவர்கள் செய்யும் காரியமாகாது.

ஆலயங்களில் நம்பிக்கையில்லாத கூட்டத்தினர், ஆலயவழிபாடுகளின் சீர்திருத்தத்தில் இறங்குவதின் நோக்கம்தான் என்ன? முறைப்படி நடந்துவரும் வழிபாடுகளை நிறுத்துவதற்கு எடுத்துக்கொள்ளும் நியாயமற்ற நடவடிக்கைகளுக்கு ஸத்யாக்ரஹம் என்ற பெயராம்? இந்த நாமகரணம் செய்தவர் யாரோ? அதற்கு இவருடைய யோக்யதைதான் எதுவோ?

முறைப்படி மணம் செய்துகொண்ட தம்பதிகள் ஏதோ காலக் கோளாறினால் பிறிந்த பின்னர் மறு மணம் செய்துகொள்ளவேண்டும் என்ற இயக்கத்தில் ஈடுபடுவதற்கும் சாஸ்த்ரீய முறைப்படி மணந்துகொண்ட பத்நி தன் கணவனை விட்டுப் பிறிந்து அயலானுடன் உறவு

கொள்ளவேண்டும் என்று புதுமுறை சீர்திருத்தக்காரர்கள் எடுத்துக்கொள்ளும் நடவடிக்கைகளுக்கும் ஸத்யாக்ரஹம் என்ற பெயராா்?

பிரஹ்மா பாக்கு, திலகர் ஊதுவத்தி, காந்தி பெருங்காயம் என்றெல்லாம் விளம்பரங்கள் இருக்க, பிராஹ்மணர்கள் போஜனசாலை என்ற விளம்பரங்களை எதிர்த்துப் போராடும் கூட்டத்தினரின் செய்கை ஸத்யாக்ரஹமாம்.

போஜனசாலைகளை ஒழியவேண்டும் என்று பாடுபடுவோர்களுக்கு நமது நன்றிஉரித்தாகும். நாட்டின் சுகாதாரத்திற்கும், தர்மத்திற்கும் பாடுபடுபவர்களுக்கு நாம் என்றும் கடமைப் பட்டுள்ளோம். ஆனால் இந்த சீர்திருத்தவாதிகளின் நோக்கம் வேறு வழியில் அல்லவோ திரும்பியிருக்கிறது.

பண்டைக் காலத்து கலாசாரங்களில் (நம் நாட்டுக்கு சீதோஷ்ண ஸ்திதியையநுஸரித்துங்கூட) மிகவும் அவசியமான சிகை முதலியவைகளைக் கண்டிக்கும் நவீனர்களின் போக்கு பலாத்காரத்தில் ஈடுபடுமாயின் இதற்கும் ஸத்யாக்ரஹம் என்று பெயரிட்டு நாம் வாளாயிருக்கவேண்டியதுதானு?

பிராஹ்மணீயத்தில் நம்பிக்கையில்லாமலிருக்கலாம். ஆனல் இதை வெறுப்பதுகூட நியாயமாகுமா? பிராஹ்மணீயத்தை வெறுப்பவன், அக்கொள்கை (யை) உடையவனை வெறுக்காமல் இருக்கமுடியுமா? ஒருவனை ஒருவன் வெறுப்பது அநுமதிக்கக்கூடிய தர்மநியாயந்தானு?

இவ்விதம் நமது ஸமூஹத்தினிடையே வெறுப்பு வளர்ந்துகொண்டே வருவதைத் தடுக்க முடியாத பெரியவர்கள், தடுக்கக்கூடிய சக்தியும், அதிகாரம் உள்ள பெரியவர்கள், தாங்கள் தடுக்காமலும், வெறுப்பு வளர்வதற்கு ஆதாரமாகவும் இருப்பதென்பது எந்த நியாயத்தில் சேர்ந்தது. இம்மாதிரியான நம் நாட்டு நியாயங்களை நிலை நிறுத்த முடியாதவர்கள், உலக அரங்கில், இவர்கள் போல் இதரர்கள் கருதும் நியாயங்களை நீக்கவேண்டும், அநீதியானது, உலகத்திற்கு ஒவ்வாதது, என்றெல்லாம் கூறுகிறுர்கள் என்ருல் இதிலிருந்து எம்மாதிரி பலனை இவர்கள் எதிர்பார்க்க முடியும்? எதிர்பார்ப்பது நியாயம் என்று நம் போன்ற நசுக்கப்பட்டவர்கள் கேட்கத்தானே வேண்டியிருக்கிறது. கடவுள்தான் இவர்களுக்கும் நற்புத்தி புகட்டவேண்டும்.

விஷ குண்டுக்கள் வெடிப்பதினல் ஏற்படும் கதிரியக்கங்கள், நாம் உட்கொள்ளும் வாயுமுழுவதையுமே விஷமுள்ளதாக்கி அதை சுவாசிப்பதின் மூலம் நாமும் விஷத்தினுல் தீண்டப்பட்டவர்களாவோம். உலகில் காணப்படுகிற காய்கறி பழவர்க்கங்கள் முதலியஸாதனங்களின் பேரிலும் இந்த விஷவாயுபடுவதால் நமக்குத் தீங்கு விளையும் என்றும் ஸகல பதார்த்தங்களையும் சுத்தமாகக் கழுவவேண்டும் என்றும் விஞ்ஞானிகள் கூறுகிறுர்கள். விஷக்கதிரியக்கங்களின் நிலை இப்படியிருக்கிறதென்றுல் நாம் முன்பு கூறிய சீர்திருத்தவாதிகளின் போக்கு இவைகளைவிட கேவலமாகவே இருக்கிறது. இவர்களுடைய வெறுப்புணர்ச்சிகளைப் புகட்டக்கூடிய சொற்பொழிவுகள், விஷவித்துக்களை நமது ஸமூஹத்தில் உள்ள சிறுவர்களுடைய பிஞ்சு மனதில் வேர் ஊன்றச் செய்து அதன் மூலம் கேடு விளைவிப்பதாகின்றன. ஒரு பெரிய கட்டடத்தில் விழுகிற ஆலம் வித்து நாளடைவில் ப்ரஹ்மாண்டமான வ்ருக்ஷமாகி மண்டபத்தைத் தகர்ப்பதுபோல் காணப்படுறது. இந்த தீய ப்ரசாரம். இப் ப்ரசாரங்கள் ப்ரசார அளவில் நின்ருல்கூட பாதகமில்லை. ஆனுல் இதில் ஸம்பந்தப்பட்டவர்கள் தங்களுக்கென்று ஏற்பட்ட மறியல், தடை செய்தல், பலாத்காரம், நாசம், இவைளின் மூலம் ஸமூஹத்திற்கே ஒரு அவமானத்தை இப்பொழுது உண்டாக்குவதோடு, நிரந்தரமாகவும் ஏற்படுத்த காரணபூதர்களாகவும் ஆகிறுர்கள். இவர்களுடைய வேற்றுமைக் கொள்கைகளை வெறுப்புணர்ச்சிகளைத் தூண்டும் அருவருக்கத்தக்க செயல்களை கண்டிக்காமல் இருப்பவர்கள் உலகத்தில் நியாயம் நிலைத்திருக்கப் பாடுபடுபவர்கள் என்று கூற முடியுமா?

சில வருஷங்களாகவே இம்மாதிரி மதஸம்பந்தமான வேற்றுமைக் கொள்கைகளை அதிகமாக ப்ரசாரப்படுத்தி நாட்டில் அமைதியின்மையை பலவாருக பல கட்சிக்காரர்கள் ஏற்ப

டுத்திவருகிறார்கள். வேற்றுமைக் கொள்கைகள் நம்மிடந்தான் உள்ளன. நாம்தான் இந்நிலைக்குக் காரணம் என்று கூறுவதானால் நமது ஸமூஹம் இதேமாதிரி பல்லாண்டுகளாக நிலைத்திருந்தபோதிலும் இம்மாதிரி இயக்கங்கள் இப்பொழுதுதானே ஏற்படுகின்றன. இவைகளுக்கு நாம் எப்படி காரணமாக முடியும் என்றுதான் நாம் கேட்கவேண்டிவருகிறது. நம்மைக் காரணமாகக்காட்டி, நம்மிடம் த்வேஷ புத்தியுள்ள இதரர்களுடைய செயலாகத்தானே இருக்கமுடியும். நடைமுறையிலும் இதுதானே உண்மை.

வேற்றுமைக் கொள்கைகளை ப்ரசாரப்படுத்துகிறவர்களை நாம் கண்டிப்பதினால் நாமே அவர்களின் வளர்ச்சிக்குக் காரணமாக நேரிடும். ஆகவே மௌனமாக இருத்தல் சாலச் சிறந்தது என்று சிலர் கூறுகிறார்கள். இது வாத அளவுக்கு ஒப்புக்கொள்ளக் கூடியதுதான். ஆனால் அநுபவத்தில் வேறு விதமாக அல்லவா இருக்கிறது.

இவர்களை அதிகாரிகள் இதுவரை உபேக்ஷித்தால், இயக்கம் இறந்துவிடவில்லை. அதிகமாக தழைத்து, கிளை விட்டுக்கொண்டு ஓங்கியல்லவோ வளர்கிறது. விஷவித்தை அப்புறப்படுத்தாததால் மரம் வளர்ந்துவிட்டது. கிளையும் விட்டிருக்கிறது. இப்பொழுது காய்த்து, பழுத்து விதைகள் சிதறி அனேக மரங்களாவதற்குள்ளாவது இதை அழித்துவிடவேண்டியது அவசியமில்லையா? இம்மரம் வீட்டைப் பிரிப்பதோடில்லாமல் நாட்டையும் பிரிக்க முற்பட்டிருக்கிறதே. இவைகளையெல்லாம் அழிக்கவுமில்லை. அழிப்பதற்கு ஆதாரவுமில்லை. அழிக்காமல் இருக்கப் பாடுபடுபவர்களுக்கு ஆதாரவும் உண்டு. இதன் விளைவு என்ன என்பதை அறிவாளிகள் அறியமுடியாதா? ஏன் இதையெல்லாம் யோசித்துப் பார்க்கவில்லை?

நமது வீட்டை நமது காட்டை சீர்படுத்திக் கொள்ள முடியாத நிலையில் அண்டை வீட்டு விஷமரம் நம்மை பாதிப்பதாகவும், அயல் நாட்டு மரங்கன் விஷவித்துக்களை நம் நாட்டில் சிதறவடிப்பதாகவும் நாம் கூறி வருவதில் அர்த்தமே இல்லை. பொதுக் கார்யங்களில்— நமக்கொரு நியாயம், பிறர்க்கு வேறு நியாயம் என்று கருதாமல், பொது நியாயங்களை மனதிற் கொண்டு அவைகளைக் கடைப்பிடிப்பதிலும், விளக்குவதிலும் பேத உணர்ச்சி கொள்ளாமல் இருப்பதே வெற்றிக்கு வழி. ஸமயத்திற்கு ஸமூஹத்துக்கு பல நியாயங்களை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். அது ஸந்தர்ப்பங்களைப் பற்றியதாக அமையும். ஆனால் ஒரே ஸமயத்தில் ஒரேஸமூஹத்தில் ஒருவருக்கு ஒரு நியாயமும் மற்றவருக்கு ஒரு நியாயமும் கூடாது. மனசாட்சி என்பது ஒவ்வொருவருக்கும் உண்டு. ஸமூஹ அடிப்படையில் ஒவ்வொருவருக்கும் ஒருவித தர்மமேற்பட்டிருக்கிறது. ஒருவன் தன் தர்மத்தைச் செய்யும்பொழுது மற்றவனும் தன் தர்மத்தைச் செய்கிறான். ஒருவனுக்கு சூழ்நிலை காரணமாய் ஏற்பட்ட மனப்போக்குக்கு மற்றவன் இணங்கவில்லை என்ற காரணத்தால் மற்றவனை வெறுக்கவோ கஷ்டப் படுத்தவோ எவனுக்கும் உரிமை கிடையாது. ஸமூஹ நலன் என்ற ஒரு கல்பிதமான காரணத்தைக் காட்டி மற்றவனும் தன் கருத்தை ஒப்புக்கொள்ள வேண்டும் என்று நிர்பந்திப்பது நியாயமாகாது.

“பொது வுடைமை” என்ற அபத்தக் கொள்கை பரவாமல் தடுக்க ஆயுதப்பெருக்கம் அவசியம் என்றும் ஆகவே நவீன ஆயுத ஆராய்ச்சியைத் தடுக்க ஒருவருக்கும் உரிமையில்லை என்று கூறுவதும் ‘ஏகாதிபத்யம்’ என்ற அசட்டுக் கொள்கையைத் தடுப்பதற்கு நவீன ஸாதனங்களை சீர்படுத்தி வைத்துக்கொள்வதும் மிகவும் அவசியம் என்று கூறுவதும் எல்லாம் அகம்பாவத்தினாலேற்பட்ட வார்த்தைகள். இதைத்தவிர்ப்பதென்பது நியாயத்தை எடுத்துரைப்பதினால்தான் முடியும். பலாத்காரத்தினால் முடியவேமுடியாது ஆனால் நியாயத்தை எடுத்துரைப்பவர்கள் நியாயத்தைக் கடைபிடிக்கும் நியாயவாதிகளாக இருத்தல் அவசியம். ஆத்மஜ்ஞானமில்லாத நியாய வாதிகள் எவ்வளவு கூறினாலும் நன்மை பயக்காது. சரீர ஜ்ஞானத்தை யுடையவன் சரீரம் மட்டில் ஸம்பந்தப்பட்ட வியாதிக்கு சிகித்ஸை செய்யலாம்.

ஆனால் மனஸ்ஸுடன் ஸம்மந்தப்பட்ட சரீர வ்யாதிக்கு என்ன சிகித்ஸை செய்தும் நிவாரணம் உண்டாவதில்லை யல்லவா? அப்படிக்கின்றி மனவெழுச்சியிலும் தேர்ச்சி பெற்றவன் இம்மாதிரி ரோகத்தைப் போக்கடிப்பதையும் நாம் பார்க்கிறோ மல்லவா.

ஆகவே சரீர ஆத்மஜ்ஞானம் உள்ள எவரும் தன்குறையை, தன் வீட்டு நிலவரங்களை உணராமல் இருக்கமாட்டார். அதற்குப் பரிகாரமும் தேடாமல் இருக்கமாட்டார். நம் நாட்டில் அரசியல் ஜ்ஞானிகளுக்குப் பஞ்சமில்லாவிடினும் ஆத்மஜ்ஞானமும் ஒருமிக்க அவர்களுக்கு ஏற்படவேண்டும் என்று சரண்யன் ஸங்கல்பித்தருள வேண்டும்.

ஸ்ரீ:

கந்யாதானம்

நமது ஹிந்து மதத்தில் அனேக பழக்க வழக்கங்கள் இருக்கின்றன. அவைகளை நாம் செய்து வருகின்றோம். ஏன் செய்கின்றாய்? எதற்காகச் செய்யவேண்டும்? என்கிற கேள்விகளைக் கேட்டால் பலருக்கு பல விஷயங்களைப் பற்றி தெரியாதாகையால் 'எங்களுடைய பெரியோர்கள் இவ்விதம் செய்து வந்தார்கள். இந்த காலத்தில் இப்படித்தான் செய்ய வேண்டும். ஸந்தேஹமிருந்தால் அவர்கள்செய்வதைப்பார்; இவர்கள் சொல்வதைக்கேள்' என்று பதில் சொல்லி விடுகிறார்கள். அவர்களிடமும் ஒருவன் இவ்விதம்கேட்டால் நம் மதத்தில் பூர்ணமாக விச்வாஸமுடையவர்களாகையால் 'இக்காலத்துப் பசங்களை இவ்விதம் கேட்கிறார்கள்' என்று சொல்லி கோபித்துக் கொள்கிறார்கள். நமது பழக்க வழக்கங்களும் ஸரியானதே. இக்காலத்தவர்கள் கேள்விகளும் ஸரியானதே. ஆனால் ஸமாதானம் கூற நமக்கு சக்தி யில்லாததே— அது விஷயங்களை நாம் நன்கு பராமர்சியாமல் இருந்ததே வருந்தத் தக்க விஷயம். நம் மதத்தில் சின்னஞ் சிறு குழந்தைகளைத் தொட்டிலிட்டுதூங்கவிடும்பொழுது 'நீயாரோ நாணாரோ' என்று சொல்லி ஆட்டிவந்தார்கள். வேதாந்திகள் சொல்லும் உட்கருத்தை ஸாதாரண ஸ்தரீயும் சொல்லி வந்தாள். இவ்விதம் நமதுமதம் சின்னவிஷயங்களிலும் உட்புகுந்து ஊடுருவி நன்மைகளையே போதித்து வந்திருக்கின்றது. அக்காலத்து பெரியோர்கள் அதன் ரஸங்களை அனுபவித்து தாங்கள் அனுஷ்டித்து பிறரையும் அனுஷ்டிக்கச்செய்வதுடன் அதனுடைய உட்கருத்துக்களையும் போதித்து வந்தார்கள். இக்காலத்தில உண்டியே உடையே என்று ஆஹாராதிகளின் மேல் இச்சையால் தன ஸம்பாதனத்தில் புத்தி சென்றுவிடுகின்றபடியால் மற்ற விஷயங்களின் தத்வங்களை அறிய அவகாசம் இருப்பதில்லை. அதன் உண்மைகளை அறியாததால் பரலோகத்தில் பலனைக் கொடுக்கக் கூடியதில் நாம் புத்தியை செலுத்துவதில்லை. செலுத்தினாலும் அதன் பலனை நாம் தெரிந்துகொள்ளாததினால் அவைகளைச் சிலர் கட்டுப்பாட்டிற்காக செய்து வருகிறார்கள். அக்கார்யங்களால் வீண் பணச்செலவு என்றும் எண்ணிவிடுகிறார்கள்.

அவரவர்களுடைய தாய் தகப்பன் களுக்கு அவரவர்கள் இறந்த 12–வது தினத்தில் ஸபிண்டீகரணம் பண்ணுகின்றார்கள். அன்றைய தினம் பிண்டஸம்யோஜந காலத்தில் முன்பு இறந்த பிதாமஹாதிகளுடன் இப்பொழுது இறந்தவர்கள் சேருவதாக இரண்டு பிண்டங்களை ஒன்றாகச்சேர்க்கும் ஸமயத்தில் 'ஶொஹிரண்யாஜ்யவாஸொயாந்ய ... ॥' என்கிறபடி பசு பூமி ஹிரண்யம் நெய் வஸ்த்ரம் நெல் வெல்லம் ரூபாய் உப்பு என்கிற 10 தானங்கள் பண்ணுகிறார்கள். இதைத் தவிர்த்து கந்யாதானமும் பண்ணுகிறார்கள். இது எதற்கு? மேலே கூறிய ச்லோகத்தில் கந்யாதானம் சொல்லப் படவில்லை. மேலும் சோககாலத்தில் சுபமான

கந்யாதானம் எதற்காகப் பண்ணவேண்டும்? உபாத்யாயர்கள் பணத்தாசையால் இதை ஏற்பாடு செய்தார்கள் என்றுசொல்லுவதற்கில்லை. இதை வேறொருவருக்குப் பண்ணிவிடுகிறார்கள். ஆகையால் இதன் உண்மையைத் தெரிந்துகொள்ளவேண்டியது அவசியமாகிறது. இது விஷயமாக புராணக் கதை ஒன்று பின்வருமாறு:—

நர்மதா நதிதீரத்தில் கௌண்டின்ய கோத்ரத்தில் தர்மவ்ரதன் என்றொரு ப்ராஹ்மணன் இருந்தான். அவன் சிறந்த பண்டிதன். மிகவும் பொறுமை உள்ளவன். ஐம்புலன்களை அடக்கியவன். அக்நிஹோத்ராதிகளைப் பண்ணிவந்தான். எப்பொழுதும் மௌன வ்ரதத்தையும் அனுஷ்டித்து வந்தான். அவன் ஒரு ஸமயம் சிஷ்யர்களுடன் விறகு கொண்டுவருவதற்கு காட்டிற்குச் சென்றான். காய், கிழங்கு, பழம் நிறைந்த இடத்தில் சிஷ்யர்களை விட்டு காட்டுப் பன்றி, காட்டெருமை சிங்கம், புலி, செந்நாய், யானை, கரடி முதலிய காட்டு மிருகங்கள் நிறைந்ததும், டாகினி, மோகினி, பிசாசங்கள், ராக்ஷஸகணங்கள் முதலியவைகள் உள்ளதுமான காட்டில் இவன் போய்ச் சேர்ந்தான். அங்கு காட்டின் அழகைப் பார்த்து ஆனந்தமடைந்தான். சற்று நின்றான். அவ்வமயம் ‘ரக்ஷ ரக்ஷ’ என்று பெரியதோர் குரல் கேட்டது. அதைக் கேட்டு ஆச்சரியப்பட்டான். பயங்கரமான அக்காட்டில் சப்தம் உண்டான இடத்தை நோக்கி மெள்ள மெள்ள சென்றான். அங்குமிங்கும் பார்த்தான். கொஞ்ச தூரத்தில் மரம், செடி, கொடிகள் நிறைந்த கிணறு ஒன்றிருந்ததைப் பார்த்தான். கிணற்றின் மேல் முட்கள் நிறைந்த மரம் ஒன்று வளைந்து கிணற்றை மூடிக்கொண்டிருந்தது. கிணற்றினுள் அநேக ஸர்ப்பங்கள் பெருமூச்சு விட்டுக்கொண்டிருந்தன. இதைப் பார்த்தான். பார்த்ததும் நடுங்கினான். பயத்தினால் மறுபடியும் ஆச்ரமத்திற்குத் திரும்பிச் செல்ல யத்தனித்தான். அப்பொழுது அக்கிணற்றிலிருந்து ஒரு சப்தம் உண்டாயிற்று. ‘இங்கு வா, எங்களைப்பார். எங்களைக் காப்பாற்று’ என்று. ஆச்சர்யமான இவ்வார்த்தைகளைக் கேட்டு ‘நீங்கள் யார்? நான் உங்களுக்கு என்ன செய்ய வேண்டும்’ என்றான். இவ்வார்த்தையைக் கேட்டதும் அக்கிணற்றிலிருந்து புகை உண்டாயிற்று. தர்மவ்ரத! பயப்படாதே. எங்களைப் பார், நாங்கள் உன்னுடைய பித்ருக்கள், உண்மையாகச் சொல்லுகின்றோம் என்றார்கள். தர்மவ்ரதன் கேட்கின்றான்— பித்ருக்களான நீங்கள் ப்ரஹ்ம லோகத்தைவிட்டு இங்கு வந்த காரணமென்ன என்று.

பித்ருக்கள்— நாங்கள் இவ்விதம் கஷ்டப்பட நேர்ந்ததைப்பற்றி சொல்லுகிறோம் கவனமாகக் கேள். நம்குலத்தில் உன்னைத் தவிர்த்து தர்மிஷ்டர்கள் ஒருவருமில்லை. ஆகையால் இக்கஷ்டத்தை அனுபவிக்கின்றோம். அன்னதானம் பூதானம் கோதானம் முதலிய தானம் செய்கின்றவர்கள் யாருமில்லை. காலையில் குளித்து அனுஷ்டானாதிகளை முடித்துக் கொண்டு அக்நிஹோத்ராதிகள் பண்ணுகிறவர்களுமில்லை. கார்த்திக மாஸத்திலும் மாசமாஸத்திலும் தேவாலயங்களில் தீபம் ஏற்றியவர்களுமில்லை, புராணாதிகளைப் படிப்பவர்களுமில்லை. படிக்குமிடத்தில் ஒருக்ஷணம் நின்றவர்களுமில்லை பகவானை துதிப்பவர்களுமில்லை. இவ்விதம் இக்குலத்தவர்கள் இருப்பதால்தான் நாங்கள் இவ்விதம் கஷ்டத்தை யனுபவிக்கின்றோம்.

இவ்வார்த்தைகளை தர்மவ்ரதன் கேட்டு நடுநடுங்கி மனம் கலங்கி மூர்ச்சிதனாகி கீழே விழுந்தான். மிக வருந்தி மூர்ச்சித்துக் கிடக்குமவனை பித்ருமூர்த்திகளான தேவர்கள் ஸமாதானம் செய்து எழுந்திரு நாங்கள் சொல்வதைக் கேள் என்றார்கள். இவ்வார்த்தைகளை அப் ப்ராஹ்மணன் கேட்டு விஸ்மயம் கொண்டான். போ! தாதா! உங்களுக்கு ப்ரீதியான கார்யம் யாது? நான் எதைச் செய்தால் நீங்கள் மோக்ஷத்தை யடைவீர்கள். அத்தர்மத்தை எனக்கு நியமிக்கவேண்டும். ஸந்தேஹம் கொள்ளவேண்டாம். உங்களுடைய நியமனப்படி அக்கார்யத்தைச் செய்ய ஸித்தமாயிருக்கின்றேன் என்று விண்ணப்பம் செய்தான் இதைக் கேட்டு பித்ருக்கள் சொல்லுகிறார்கள்.

பித்ருக்கள் மோக்ஷமடைய அனேக தானங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அவைகளுள் மிக உயர்ந்தது கந்யாதானம். ப்ரஹ்மாவும் முன்பு கந்யாதானம் பண்ணியிருக்கின்றார். அது முதல் தமது பித்ருக்கள் மோக்ஷமடைவதற்கு கந்யாதானம் பண்ணி வருகிறார்கள். இந்த கிணற்றைப் பார் எத்தனை விதமான விஷ ஜந்துக்கள் நிறைந்திருக்கின்றன. நீங்கள் விடும் திலோதகத்தை எதிர்பார்த்துக்கொண்டு நாங்கள் இங்கிருக்கின்றோம் எல்லாம் தெரிந்த உங்களால் இத்தானம் செய்யப்படவில்லை. இக்கிணற்றில் அழுந்திக் கிடக்கும் எங்களை கரையேற்ற நீ இங்கிருந்து சென்று நியமனப்படி கந்யாதானத்தை செய். கந்யகைகள் இல்லாதவர்கள் 'க்ஷேத்ராஹாவே ஸ்வகாஜீவ்யாஸ விவாஹம் காரயந்தி யே । தேஷாம்வை பித்ருணாம் ச ஸுஹயொகோ ஹவிஷ்யதி ॥' என்கிறபடி தங்களுடைய த்ரவ்யத்தைக்கொண்டு கல்யாணம் செய்துவைத்தாலும் மோக்ஷம் உண்டு என்று சொல்லி மறைந்தார்கள். இதைக் கேட்டுக் கண்ணுற்ற ப்ராஹ்மணச்ரேஷ்டன் மிக்க ஆச்சரியப்பட்டான். பின்பு அங்கிருந்து ஆச்ரமத்தை அடைந்து சிஷ்யர்களுக்கும், அண்டையிலுள்ள அந்தணர்களுக்கும் இவ்விஷயத்தைச் சொல்லி வெகு சீக்கிரத்தில் பித்ருக்களின் நியமனப்படி அனேக கந்யாதானங்கள் பண்ணினான். உடனே அவனுடைய பித்ருக்களும் மோக்ஷத்தையடைந்தார்கள். ச்ராத்த காலத்தில் இத் தானத்தைப் பண்ணினால் பித்ருக்கள் ஸந்தோஷமடைகிறார்கள். பண்ணுகிறவனும் எல்லா பாபங்களிலிருந்தும் விடுபட்டவனாகிறான். ஆகையாலேயே ஸபிண்டீகரணகாலத்தில் பித்ருக்களுக்கு மோக்ஷத்தைக் கொடுக்கக்கூடியதான இத்தானத்தையும் தசதானத்துடன் பண்ணிவருகிறார்கள்.

ஸ்ரீ:

"ஸஹதர்மசாரிணீ"

ஸ்ரீசக்ரவர்த்தித் திருமகன் வநவாஸத்தில் பிராட்டியைப் பிரிந்து வருந்த நேர்ந்த ஸமயம் மஹர்ஷியால் வெகு பொருத்தமுடையதாகக் காட்டப்பட்டிருக்கிறது. இது நன்கு யோசிக்குங்கால் புலனாகும். மாயமான் உருவங்கொண்டு மாரீசன் ஆச்ரம ஸமீபம் வந்து ஸீதையின் பார்வையிற்படும்படி ஓடியாடி நிற்கிறான். பூக்கொய்து வரும் பிராட்டி மானைக் கண்டு மயங்கி ஆச்ரமத்துள்ளிருக்கும் இருவரையும் ஆயுதத்துடன் வரும்படி உரத்துக் கூவி அழைக்கிறாள். லோகமாதாவாயினும் பிராட்டி தன்னுடைய பெண்மைக்கேற்ப, அதை உயிருடன் பிடித்து விளையாடத் தரும்படி பர்த்தாவை வேண்டுகிறாள். அதன் குரல் இனிமையும் உடல் அழகும் விசித்ரமான அவயவங்களும் அவளுடைய மனதை வெகுவாகக் கவர்ந்து விட்டன. இந்த்ரநீலக் கல்லில் கடைந்தெடுத்த தொன்னை போன்ற நீண்ட முகமும், சங்கு போல் வெளுத்த உள் வயிறும், ஒவ்வொரு ஸமயம் மேகமண்டலத்திலிருந்து வெளிப்படும் மின்னல் கொடி போல் மின்னும் இலை நாக்கும் அந்த மானுக்கு எந்த ம்ருகத்துக்கும் இல்லாத ஓர் அழகைக்கொண்டு சேர்த்துவிடவே பெருமாளும் அதனிடம் ஈடுபட்டார். ஸீதை கள்ளமற்ற மனத்தினளாய் அம்மானை அயோத்யைக்கும் அழைத்துச் சென்று கௌஸல்யை பரதன் முதலியவர்களுக்கு அபூர்வப் பொருளாய்க் காட்டி ஆனந்தப்பட ஆசைக் கொண்டதைக் கேட்ட பிறகு அவரால் தான் ஆறியிருக்கப் போமோ? இத்தருணத்தில் பர்த்தாவைத் தனக்காகச் சில செய்ய நிர்பந்தித்த கைகேயியினுடைய தவறான உதாஹரணம் பிராட்டிக்கு நினைவிற் தோன்றவே, அவ்விதம் செய்தற்காக வருந்தி

தன்னுடைய இப்பேராசையை பெருமாள் மன்னிக்க வேண்டுகிறாள். உயிருடன் அம்மான் சிக்காது போனால் என்ற ஸந்தேஹத்திற்கும் பிராட்டி இடம் வைக்கவில்லை. ரத்னப் புள்ளிகள் நிறைந்த அதன் பொன்னிறத் தோலில் பெருமாளும், தானும் உடனமர்ந்து மகிழ்ச்சியுடன் பொழுது போக்க நினைத்திருப்பதாய் தன் கருத்தை வெளியிட்டாள்.

இவ்விதம் ஸீதையின் பேரவாவைப் பூர்த்தி செய்ய பெருமாளும் உண்மையிலேயே உறுதியாக திருவுள்ளம்பற்றினபோது இளைய பெருமாள் செய்த எச்சரிக்கைகள் பயனற்றுப் போயின. 'மாயாவி மாரீசன் இவன்' என்பதைப் பெருமாள் பொருட்படுத்தவேயில்லை. இவ்விதம் வெகு த்வரையுடனும் உறுதியுடனும் சென்ற பெருமாள் கடைசியில் முடித்துக்கொண்டு வந்தது என்ன? பிராட்டி பெருமாள் திரும்பும்போது ஆச்ரமத்தில் இருந்திருந்தால் என்ன நடந்திருக்கும்? பிராட்டியின் திருவுள்ளம் நிறைவேறிற்றா? என்றெல்லாம் நாம் யோசிக்கவேணும்.

மாயமான் அடிபட்டு ராமபாணத்தால் விழ்ந்த உடன் மான் உருவம் மறைய பழைய மாரீசனே அங்கு விழ்ந்து கிடக்கக் காணப்பட்டான். வெறுங் கையுடன் திரும்ப மனமின்றி ஸ்ரீராமன் வேறு மான் கொன்று கொண்டு திரும்பினார் என்று ஸ்ரீராமாயணம் கூறுகிறது. ஆக பிராட்டியின் இரண்டுவிதத் திருவுள்ளப்போக்கும் இங்கு பலிக்கவில்லை. அன்று காடேறப் புறப்படும்போது தன்னையும் உடனழைத்துச் செல்ல விரும்பிய பிராட்டியின் விருப்பம் அவ்விதம் செய்யேன் என்ற பெருமாளால் தடையுற்றபோது ப்ரணயரோஷத்தால் பிணங்கி பிராட்டி அருளிச்செய்த வார்த்தைகள் ஜகத்ப்ரஸித்தமானவைகள். 'ஆணுடையுடுத்து வந்த பெண்ணின் கையிலோ எங்கள் ஐய்யர் என்னை நீர் வார்த்துக் கொடுத்தது' என்று வெது வெதுப்பாகப் பேசினாள். இன்றும் அவ்விதமே பிராட்டி ஏசிப் பேசியிருப்பாள். ப்ரணயகலகம் நேர்ந்து ரோஷத்துடன் பிரியவேண்டியிருக்கலாம்.

இதற்கெல்லாம் இடமின்றி கபட ஸந்யாஸி வந்து பிராட்டியைக் கொண்டு போனான். வாள் வெட்டில் தேள்கடி மறக்கப்படுவதேபோல் அந்தப் பெரிய அநர்த்தத்தில் பெருமாளின் சோகவேகத்தில் நாமும் முழுகிப் போகிறோம். பிராட்டியும் ராவணனைக் கண்டு மதி கலங்கி நிற்கிறாள். மாயமானைப் பற்றியொன்றுமே சிந்தித்திலள். அப்போது பெருமாளுடன் ரோஷத்தாலே ஊடுவதற்கேது அவகாசம். ப்ரணயகலஹத்தால் மனத்தாங்கலுடன் பிரிவதைக் காட்டிலும், அன்யோன்யம் அன்பு குறையாமல் ஒருவர் இக்கரையிலும், மற்றவர் அக்கரையிலுமாக பிரிந்திருப்பதே கேட்பவர் மனதில் கருணாரஸத்தை மிகவும் விளைவிக்கும். ஆகையால் பெருமாள் வெறும் கையுடன் திரும்பியபோது பிராட்டி அங்கு இல்லாதது கதைப் போக்குக்கு மிகவும் உசிதம்.

வாநரமுதலிகள் ஸீதையைக் கண்டு குதூஹலித்துத் திரும்பும்போது நடுவில் 'மதுவனம்' என்பதொன்றில்லையாகில் வாநரர்களின் அத்தனை விளையாட்டும் ராஜபுத்ரர்களின் முதுகோடே போம் என்பதாகப் பெரியோர்கள் பணிப்பதுண்டு. அவர்களின் குதூஹலத்திற்கு ஒரு போக்கு வீடு வேணுமே. அதிலும் வாநரஜாதிகளின் சேஷ்டை ப்ரஸித்தமாயிற்றே. மதுவனம் ஒன்று நடுவில் இருந்து இவைகளைத் தாங்கிக்கொண்டது. அவர்களின் உத்ஸாஹம் ஓரிடத்தில் சிலவழிந்ததால் ராஜபுத்ரர்களிடம் போம்போது ஓரளவு தங்களை ஸமாளித்துக் கட்டுப்படுத்தி வணங்கி ஒழுங்காய் அவர்கள் நடந்து கொண்டனர். அதுபோல் இங்கும் ராவணன் அபஹரிக்க ஸீதாதேவியின் விரஹம் நேராது போனால் அவள் விருப்பம் தடையுற்றது காரணமாக ப்ரணயரோஷம் தலையெடுத்து கதை அமைப்பே மாறிவிடலாம்' என்று ஊஹிக்க இடம் இருக்கிறது.

இவ்வாறே ராவணவிஜயம் செய்து வெற்றி வீரராக ராகவன் திரும்பியதும் வெகு உசிதமான ஸமயத்திலேயாயிற்று. பதினான்கு வருஷம் வநவாஸம் செய்து முடித்து அயோத்திக்கு ஒரு கணமும் தாழ்த்தாமல் எழுந்தருள

வேணும் என்று பரதன் ப்ரார்த்தனை. அன்றேல் அக்நியில் விழவும் அவர் தயாராகவிருந்தார். அசோகவனத்தில் ஸ்ரீராமனை எதிர்நோக்கி இரண்டு மாதமேதான் உயிர் வாழ்வதாக திருவடியிடம் பிராட்டி மொழிந்த செய்தி. திருவடியின் எதிரிலேயே முன்பு ஒரு தடவை உயிர் துறக்கத் துணிந்த பிராட்டியை மீட்டுக் கொண்டல்லது பெருமாளுக்கு அயோத்திமாநகர் செல்லவொண்ணாது. இவ்விதம் வெவ்வேறு இடங்களில் தவறாது செய்து முடிக்கவேண்டிய இரு கார்யங்கள் இருந்தும் அவைகள் காலத்தால் ஒன்றுக்கொன்று முரண்படாமல் முன்னது பின்னதாய் செய்துமுடிக்கலாம்படி அமைந்ததும் இலங்கையில் செய்ய வேண்டியன செய்து, பதினான்காவது வருஷம் முடிந்தவன்றே பரதனுடன் கூடலாம்படி ஆனதும் கதையில் எவ்வளவு இயற்கையாய் ஸுலபமாய் அமைந்துள்ளன என்பதை நாம் கவனிக்கவேணும். ஆக இவ்வளவால் திவ்ய தம்பதிகளின் பிரிவும், கூடலும் மஹர்ஷியால் வெகு சமத்காரமாய் கையாளப்பட்டு இருக்கிறது என்ற விஷயம் சொன்னோம்.

இனி இவர்களுக்குப் பிரிவாவது, இவர்கள் தங்களுள் செய்துகொண்ட ஏதோ ஒரு ஸங்கேதத்தின்படி ஸ்தூல சரீரத்தால் ஒருவரை ஒருவர் விட்டு விலகி நிற்பதுபோல் நமக்குத் தோன்றச் செய்வதே அன்றி மற்றில்லை என்று சிறிது சொல்வோம். பெருமாள் பிராட்டியிருவரும் தம்முடைய நித்ய விக்ரஹத்தால் பிரிவின்றி நிற்பவர். தான் ப்ரஹ்மசாரியாய் வாமனனாகி மாபலியிடம் இரப்பாளனாகச் செல்லும் போதும் அவளை விலக்கமுடியாதவனாய் தன் மார்பகத்தே அவளை வைத்து மான் தோலிட்டு மறைத்துச் சென்றான் என்று புராணங்கள் கூறுகின்றன. தனிக்கோயிலில் தாயாராகி வீற்றிருக்கும் பிராட்டியின் பக்கலில் பகவத் விக்ரஹம் புலப்படாததால் திவ்ய தம்பதிகள் சேர்ந்தே நமக்குத் தெய்வம் என்ற ஸம்ப்ரதாயத்தைக் கடைபிடித்தொழுகும் பரமைகாந்தி ஸ்ரீவைஷ்ணவர்கள் சென்று அங்குத் தொழுதல் முறையாகுமா என்ற சங்கைக்கு ஸ்ரீ ஸ்வாமி தேசிகன், அங்குள்ள பிராட்டியின் திருவுருவத்திலும் விஷ்ணுவின் பத்நியான தன்மை பரிபூர்ணமாய் இருப்பதால் பகவத்ஸாந்நித்யம் குடிகொண்டுள்ளது என்றும் அங்கும் அவர்கள் சென்று வணங்குதல் வலமே என்றும் பதில் ஸாதித்தார். ஆக அவர்கள் உலகத்தவரை திருத்துவதற்காக நமதுகட் புலனுக்குப் பிரிந்தவர்களாயினும் நித்ய விக்ரஹத்தால் நீக்கமின்றி அணைந்தவர்களே.

இதைத் திருவுள்ளம்பற்றியே ரகுவீரகத்யத்தில் ஸ்வாமி தேசிகன் 'ஸ்வஸமய விகடித ஸுகடித ஸஹதர்மசாரிணிக!' என்று ஸ்ரீராமபத்ரனை அழைத்து ஜயகோஷம் செய்தருளுகிறார். ஸமயம் என்பது தங்களுக்குள் செய்துகொள்ளும் ஓர் ப்ரதிஜ்ஞை. அவ்விதம் செய்துகொள்ளப்பட்ட ஓர் ஸங்கேதத்தால் பிரிந்தவளும், பிறகு கூடியவளுமான ஸஹதர்மசாரிணியை (தர்மபத்நியை) கொண்டவனே! ராகவ! என்று அழைத்தவாறு. இங்கு பிராட்டியை ஸஹதர்மசாரிணி என்றதால் பெருமாளுடன் கூடவிருந்து சரணாகதரக்ஷணதர்மத்தில் என்றென்றும் பங்கு கொள்ளும் இயல்பினள், என்ற பொருள் த்வநிப்பதால் பிரிவிலும் சேர்த்தி உண்டென்றும், பிரிவு உலகத்தவர் கருத்துப்படியே அபிநயிக்கப்படுகிறது என்றும் நாம் மேலே கூறின பொருள் தேறும்.

(தொடரும்)

210739

ஸ்ரீ:

ஒரொன்றுதானே (8)

நாநாஶீலைர்ஜநிமதி ஸமயை: நஷ்டஶீர்ஷாம் விபக்ஷா:
சக்ஷும் வக்ஷும் க்ஷபயதி விஹோராஹிதவ்யஸ்தஹேஷ |
விஶ்வம் த்ராதும் விஷயநியதம் வ்யஞ்ஜிதாநுக்ரஹஸ்ஸந்
விஷ்வக்ஸேநோ யதிபதிரபூத் வேத்ரஸாரஸ்த்ரிதண்ட: ||

பகவத் பாஷ்யகாரருடைய திவ்யோத்ஸவம் இப்பொழுது நடைபெற்றுவருவதாலே யதிராஜஸப்ததிச்லோகங்களை ஸேவித்துக்கொண்டு வந்ததில் அவற்றுள் 32-வது ச்லோகமான இந்தச்லோகம்சற்று நூதனமானரஸவிசேஷங்களைத் தந்து விளங்கியது. அவைகளைப் பெரியோர்கள் திருவடிகளில் பணிந்து இங்கே விண்ணப்பித்துக்கொள்கிறேன்.

உலகத்தில் பல ப்ரகாரங்களான ஸித்தாந்தங்களை விநோத வ்யாபார முறையில் செய்ய ஆசைகொண்ட லோகநாதனுடைய ஆதிவ்யூஹ ரூபம் (வாஸுதேவரூபம்) கடைசி வர்ணத்தை ப்ரகடனம் செய்யுங்கால் விஷயசுகத்திலே மண்டிக்கிடக்கும் உலகோர்களைக் காக்கவேண்டிய பொறுப்பு தம்மது என்று கருதி விஷ்வக்ஸேநர் தமது கிருபையை ஆவிஷ்கரித்துக்கொண்டு இங்கே ஸ்ரீபாஷ்யகாரர் வடிவில் அவதரித்தார். அவரது வேத்ரமென்னும் செங்கோலும் த்ரிதண்டமாக வந்தது என்பது இந்த ச்லோகத்தின் திரண்ட பொருள்.

மதி விகற்பால் பிணங்கும் ஸமயம் பல பல வாக்கி வைத்தவன் ஸ்ரிய:பதியேதான். அச்சமயம் பலவற்றுள் பீதகவாடைப் பிரானார் பிரமகுருவாகி நின்று 'கமப்யாத்யம் குரும் வந்தே' என்று முதல் ஆசார்யனாகக் கணக்கிடப்படும் இந்த நம் ஸ்ரீ விசிஷ்டாத்வைதமதம் தவிர மற்ற மதங்களெல்லாம் சற்று ஏறத்தாழத்தான் இருப்பவை. ஆபாதசூடம் அநபாயினியானது இந்த ராமாநுஜதர்சநம்ஒன்றுதான். எம்பெருமான் ப்ரவர்த்திப்பிக்கும் சாஸ்திரங்கள் இருவகைப்பட்டவையென்று தயாசதகத்தில் அநுபவிக்கப்படுகிறது. தயாதேவியோடு ஸம்பந்தப்பட்டு தயாப்ரேரிதங்களாகச் செய்யப்படும் சாஸ்திரங்கள் ருஜுவானவை. தயையின் ஸாந்நித்யம் குறைந்து லீலாரஸப்ரேரிதங்களான சாஸ்திரங்கள் மோஹன சாஸ்திரங்கள். பௌத்தம், ஸாங்க்யம் போன்ற மதங்களுக்கு வக்தாவாயும், ப்ரேரிதாவாயும் ஸர்வேச்வரனே நின்றபோதிலும் 'உனக்கேலும் பிழை பிழையே' என்ற கணக்கில் நம் பூர்வாசார்யர்கள் அவைகளைக் கண்டிக்கக் கூசுவதில்லை. 'இதி மோஹந வர்த்மநா த்வயாபி க்ரதிதம் பாஹ்யமதம் த்ருணாய மந்யே' ஸ்ரீரங்கராஜஸ்தவம், உத்-சதகம்-16. அம்மதங்களைக் கண்டித்தார் என்பதோடு நில்லாமல் அம்மதங்களை நிறுவியதற்காக எம்பெருமானைக் குறை கூறவும் செய்வர்கள். உலக க்ஷேமத்திலே அவ்வளவு நோக்கு நம் பூர்வாசார்யர்களுக்கு. ப்ரபந்நஜந ஸந்தானகூடஸ்தராய் நமக்கெல்லாம் ஆதி குலபதியாய் விளங்கும் நம்மாழ்வார் 'நின் மாட்டாய மலர்புரையும் திருவுருவம் மனம் வைக்கமாட்டாத பல சமய மதி கொடுத்தாய் ....மாஞாலம் வருந்தாதே' என்று பெருமாளிடத்து மனஸ்தாபப் படுகிறார் மூன்றாம்பத்து முதல் திருவாய்மொழியில். அதே மனோபாவத்திலிருந்துதான் ஸ்வாமி தேசிகனிடமிருந்து இந்த யதிராஜஸப்ததிச்லோகமும் அவதரித்திருக்கவேண்டும். நர்மலீலை அதாவது விநோதரஸம், அதிலிருந்து உண்டானவை. லீலாப்ரவ்ருத்தங்களான ஸமயங்கள். அவைகளும் 'நாநாபூதை:' பல்வகைப்பட்டவைகள். அவைகளைச் செய்து போகுவதில் எம்பெருமானுக்கு ஒருக்கால் இச்சை உண்டாயிருந்தது முதல்பாதத்தால் பேசப்பட்டது.

அதற்குச் சேர காலமும் கலிகாலம். தர்மத்திற்கு மிகுதியான க்லாநி நடையாடும் காலம்.

தப்பைத் தப்பாகக் கண்டு நிராகரிக்கச் சக்தியற்று மாந்தர்கள் மயங்கும்காலம். இது பாஞ்சராத்ர ப்ரதிபாத்யமான ஒரு விஷயத்தைச் சொல்லி ச்லோகத்தின் இரண்டாம் பாதத்தில் நிர்தேசிக்கப் படுகிறது. வாஸுதேவ, ஸங்கர்ஷண, ப்ரத்யும்ந, அநிருத்தர்சன் என்கிற நான்கு வ்யூஹ மூர்த்திகளுள் முதலாவது வாஸுதேவ மூர்த்தி. மேற்கொள்ள 'நால்வருக்கும் க்ருத த்ரேதாதி யுக பரிவ்ருத்தி க்ரமத்தாலே, ஸித, ரக்த, பீத, க்ருஷ்ண வர்ணங்கள் மாறி மாறி வரும்' என்பது ஸ்ரீமத் தத்வத்ரய சுளகத்தில் ஸ்வாமி தேசிகன் ஸாதித்தருளிய படி வாஸுதேவ ரூபத்துக்குக் கடைசீ வர்ணம் ஸம்பவிப்பது கலியுகத்திலே. ஆகவே 'ஆதிமவ்யூஹபேதே அந்த்யம் வர்ண்யம் ப்ரதயதி (ஸதி)' என்பதால் கலிகாலமும் வந்தவாறே என்று பொருளாகிறது.

காலமும் கலியாய் ஜகத்தை ரக்ஷிக்கக்கடவ பெருமாளும் மாயாசாஸ்திரங்களைப் பரவச் செய்துவைத்திருக்க உலகைக் காக்கவேண்டிய பொறுப்பு தம்மது என்று கொண்டு விஷ்வக்ஸேநர் யதிராஜராக இவ்வுலகில் அவதரித்து உலகோர்களைத் திருத்திப் பணி கொள்கிறார் என்று ச்லோகததின் பிற்பாதியால் ஏற்படுகிறது. ஏற்கனவே சேதனர்கள் விஷய ப்ரவணர்கள். காலம் கலிகாலம்; ஸத்வம் தலையெடுக்க வழியில்லை. இவர்களுக்கு ஸ்வாமியான ஸர்வேச்வரனும் இவர்களை மேலும் மேலும் மோஹிப்பித்திருக்கும்போது 'விமல நியதம் விச்வம் த்ராதும் விஷ்வக்ஸேந: வ்யஞ்ஜித அநுக்ரஹஸ்ஸங் யதிபதி: அபூத்' அநுக்ரஹிக்கக் கடமைப்பட்டவன். அநுக்ரஹத்தை அபலபிக்க முற்படவே இவர் அதை வ்யஞ்ஜநம், வெளிப்படையாகச் செய்யவேண்டிய அவசியம் ஏற்பட்டது. நிரங்குச ஸ்வதந்த்ரனான அரசனால் ஏற்பட்ட ஸங்கடத்தை ஸங்மந்திரிகள் விலக்க வழி தேடுவதுபோல் பெருமாளால் நேரும் துன்பங்களைத் தாமே போக்க முற்படுகிறார் ஸேனை முதலியார். 'த்வயா நிஸ்ருஷ்டாத்மபரேண' என்றபடி பெருமாள் பரத்தை வஹிக்கவேண்டியவர் இவரேயன்றோ?

ரஸமான இப்பொருள் நிற்க, அதிரஸமான ஸ்வாமி தேசிகன் திருவுள்ளத்திலநுபவத்துக்கே விஷயமாகக்கூடிய வேறொரு பொருளும் த்வநிக்கிறது இச் சுலோகத்தில். வர்ணம் என்கிற சொல் நிறத்தையும் சொல்லும், ஜாதியையும் சொல்லும். அந்த்யம் வர்ணம் என்றபோது கருப்பு நிறம் என்பதுபோல், கடைசி ஜாதி, அதாவது சூத்ரஜாதியும் சொல்லுக்குப் பொருளாக வேண்டும். ஸ்வாமி தேசிகன் ஸ்ரீஸூக்திகளில் நாநார்த்த ப்ரகாசகமான பதம் ஒன்று ப்ரயோகிக்கப்பட்டால் இயன்றவரையில் அவ்வர்த்தங்களையெல்லாம் கொள்ள ப்ராப்தம் என்பது ரஸிகர்களான தேசிகபக்தர்கள் கண்டறிந்த உண்மை. அம்முறையில் வர்ணசப்தத்திற்குப் பொருள் கொண்டால் 'பெருமாள் நான்காவது வர்ணத்தில் தம்மை ப்ரகாசப் படுத்திக்கொண்டபோது' என்று பொருளாகவேண்டும். அதாவது பெருமாள் நம்மாள்வாராக அவதரித்தபோது. 'யஸ்யாஸௌ பஜதே கதாசித் அஜஹத் பூமா: ஸ்வயம் பூமிகாம்' என்றும் 'பராங்குச பரகாலாதி ரூபத்தாலே அபிநவமாக ஒரு தசாவதாரம் பண்ணி அநேக தேசிகாபதேசத்தாலே அவதரித்தருளினான்' என்றும் ஸ்வாமி அருளிச்செய்திருக்குப்படி. எம்பெருமானே நம்மாழ்வாராகத் தோன்றியருளினான் என்பது ஸுஸ்பஷ்டம். புத்தராயும், கபிலராயும் தோன்றி லீலாரஸத்துக்குச் சேர அபஸித்தாந்தங்களைச் செய்துவைத்த குறையை பரிஹரிக்கப் பெருமாள் தாமே ஆழ்வாராகத் தோன்றியமை இச் சுலோகத்தால் பேசப்படுகிறது.

இப்படிப் பொருள் கொண்டால் 'விச்வம் த்ராதும் விஷயநியதம்' என்ற சொற்களை 'அந்த்யம் வர்ண்யம் ப்ரதயதி' என்ற சொற்களோடு அந்வயிக்கக் குறையில்லை. 'முதற்பெருங் கடவுளான விபு, தன்னைப் பலவகையாகப் பல யோனிகளில் பிரித்துக் காட்டும் முறையில் உலகத்தைக் காக்கவேண்டி நான்காவது வர்ணத்தில் தன்னை ப்ரகாசப்படுத்திக் கொண்டு நின்றபோது அந்த அவதாரத்தை உலகோர்கள் பயன்படுத்திக்கொள்ளாது போய்

விடுவார்களோ என்று அஞ்சி அவர்களிடத்தில் ஆவிஷ்கரிக்கப்பட்ட அநுக்ரஹ புத்தியுடன் விஷ்வக்ஸேநர் உடையவராகத் தோன்றினார் என்று சொல்லப்பட்டதாகிறது. 'பண்டொரு மாறன் பசுந்தமிழ் ஆனந்தம் பாய்மதமாய் விண்டிட எங்களிராமாநுச முனி வேழம். மெய்ம்மை கொண்ட நல்வேதக் கொழுந்தண்டமேந்திக் குவலயத்தே மண்டிவந்தேன்றது. வாதியர்காள்! உங்கள் வாழ்வற்றதே' என்கிற அமுதனார் அமுத வாக்கின் படியும்: தமிழ் மறைகளாயிரமும் 'ஈன்ற முதல்தாய் சடகோபன், மொய்ம்பால் வளர்த்த இதத்தாய் இராமாநுசன்' என்கிற தனியன் படியும், ஆழ்வார் செய்த மஹோபகாரத்தைப் பலபடிகளிலும் உலகில் பரவச்செய்து மக்கள் அதைக் கொண்டு உஜ்ஜீவிக்கும் படி செய்துபோந்த அருந்தொண்டு எம்பெருமானாருடையதேயாதலால் அதை இந்த சுலோகத்தால் பாராட்டி ஹ்ருஷ்டராகிறார் ஸ்வாமி தேசிகன் என்று ஏன் சொல்லக் கூடாது? கலிகாலம் என்பதைக் காட்டமட்டுமா 'அந்த்யம் வர்ண்யம் ப்ரதயதி விபோ: ஆதிமவ்யூஹபேதே' என்று இரண்டாவது பாதத்தை அமைத்திருப்பர் ஸ்வாமி? த்வநி கொண்டு அதிசயப் பொருள் ஒன்றை அதில் புகுத்தவே அப்படிப் பாடியிருக்க வேண்டும். அப்பொருளும் ஆழ்வார் பரமான நற்பொருளாகவே யிருக்கவேண்டும் என்ற யோசனையில் இவ்வண்ணம் இங்கே விண்ணப்பித்துக் கொண்டபடி. வாஸுதேவரூபம் கறுப்பு நிறத்தை மேற்கொள்ளும் கலி பிறந்தவுடன் பிறந்தவர்தானே ஆழ்வார்?

'வேத்ரஸார: த்ரிதண்ட:' என்ற கடைசி சொற்றொடரும் ரஸம். விஷ்வக்ஸேநர் யதிபதியாக அவதரித்தாரென்றால் அவர் திருக்கையிலுள்ள வேத்ரமும் (பிரம்பும்) உடையவர் திருக்கைகளுக்கேற்ற த்ரிதண்டமாக ஆயிற்றாம். 'ஸாரம்' என்றால் மரத்தினுடைய வைரம் (வலிவு) நிறைந்த பாகம் என்று பொருள். ஆகவே ஒரு வேத்ரம் மூன்று தண்டமாக மாறக் குறையில்லையே. நித்ய விபூதியில் வேத்ரம் செய்யும் பணியை லீலாவிபூதியில் ஸ்ரீபாஷ்யகாரர் திருக்கையில் த்ரிதண்டம் செய்து போந்தது என்று திருவுள்ளம். வேத்ரமாகிய செங்கோலுக்கு சிக்ஷையிலும் (உபதேசத்திலும்) அந்வயமுண்டு. சிக்ஷணத்திலும் (தண்டிப்பதிலும் அந்வயமுண்டு. அது கொண்டு 'யத்வேத்ரசிகராள்பந்தே விச்வமேதத் வ்யவஸ்திதம்' என்று முன்னமே இந்த ஸப்ததியில் பாடப்பட்டது. த்ரிதண்டத்துக்கு உபதேசத்தில் மட்டும்தான் உபயோகம் என்பதைத் தெரிவிக்கவே 'வேத்ரஸார:' என்று பதப்ரயோகம் விழுந்திருக்கிறது. தண்டனையும் சீர்திருத்தத்தை உத்தேசித்துத்தானாகையால் வேத்ரத்தின் ஸாரம்தான் ஸ்வாமிபாஷ்யகாரர் திருக்கையில்விளங்குகிறதுஎன்றுஅழகாக ஸாதிக்கப்பட்டிருக்கிறது. அஜ்ஞாத நிக்ரஹையான பெரிய பிராட்டியாரைப் போல், தயாஸுதாம்புநிதியென்றும் 'தயைகதாம்ந:' என்றும் 'காரேய் கருணை இராமாநுசன்' என்றும் 'பெரும்பூதூர் வந்தவள்ளல்' என்றும் பாராட்டப் பெற்ற எம்பெருமானாரிடம் நிக்ரஹம் கலசாத அவக்ரஹமே காணப்படும் என்பதை இதிலும் அழகாய்ப் பேச முடியுமோ?

ஸ்ரீ:

நூற்றெட்டுத் திருப்பதிகள்

(3-வது ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

10 திருவழுந்தூர்-தேரழுந்தூர்:— ஆமருவியப்பன். கிழக்கே திருமுகமண்டலம். நின்ற திருக்கோலம். செங்கமலவல்லித் தாயார். கருடவிமானம். தர்சனபுஷ்கரிணி. உபரிசரவஸு ராஜாவுக்கும், காவேரிக்கும், தர்மதேவதைக்கும் ப்ரத்யக்ஷம்.

திருமங்கையாழ்வார்:— தந்தைகாலில் 10. சிங்கமதாய் 10. திருவுக்கும் 10. செங்கமல10 கல்லுயர்ந்த-தேமருவு-சீரார் கணபுரம் சேறை திருவழுந்தூர்-அள்ளல் வாய். ஸ்டேஷன்தேரழுந்தூர்.

11. சிறுபுலியூர்:— அருள்மாகடல். தெற்கே திருமுகமண்டலம். புஜங்கசயனம். திருமாமகள் நாச்சியார். நந்தவர்த்தன விமானம். அநந்த ஸரஸ். மாநஸ புஷ்கரிணி. வ்யாஸருக்கும், வ்யாக்ரபாதருக்கும் ப்ரத்யக்ஷம்.

திருமங்கையாழ்வார்:— கள்ளம் மனம் 10. ஸ்டேஷன் கொல்லுமாங்குடி. அங்கிருந்து 1 மைல்.

12. திருச்சேறை:— ஸாரநாதன். கிழக்கே திருமுகமண்டலம். நின்ற திருக்கோலம். ஸாரநாயகி. ஸாரவிமானம். ஸாரக்ஷேத்ரம். ஸாரபுஷ்கரிணி. காவேரிக்கு ப்ரத்யக்ஷம். பெருமாள், தாயார், க்ஷேத்ரம். விமானம், தீர்த்தம் இவைகளின் பெயர்கள் ஸாரமாகையால் இது பஞ்சஸாரக்ஷேத்ரம்.

திருமங்கையாழ்வார்:—கண்சோர 10. ‘வானையார்’ ‘சீரார் கணபுரம் சேறை’ ‘மன்னியதன்’ கும்பகோணம் ஸ்டேஷனிலிருந்து தென்கிழக்கே 7 மைல்.

13. தலைச்சேங்கண் நாண்மதியம்-தலைச்சேங்காடு:— நாண்மதியப் பெருமாள், வெண்சுடர் பெருமாள். கிழக்கே திருமுகமண்டலம். நின்ற திருக்கோலம். தலைச்செங்க நாச்சியார், செங்கமலவல்லி. சந்த்ரவிமானம். சந்த்ரபுஷ்கரிணி தேவப்ருந்தங்களுக்கும், சந்த்ரனுக்கும் ப்ரத்யக்ஷம்.

திருமங்கையாழ்வார்:—‘கண்ணார்கண்ணபுரம் ....தலைச்செங்க மேல் தசையுள்’ ‘நன்னீர் தலைச்செங்க’ ஆக்கூர் ஸ்டேஷனிலிருந்து 2 மைல். (மாயவரம் to தரங்கம்பாடி லயனிலுள்ளது.)

14. திருக்குடந்தை-கும்பகோணம்:—சாரங்கபாணிப் பெருமாள்- ஆராவமுதன். கிழக்கே திருமுகமண்டலம். உத்யோகசயனம். கோமளவல்லித் தாயார். வைதிக விமானம். ஹேமபுஷ்கரிணி. காவிரி நதி. ஹேமரிஷிக்கு ப்ரத்யக்ஷம்

பெரியாழ்வார்— ‘கொங்கும் குடந்தையும்’ ‘ஆலத்திலையான்’ ‘குடங்களெடுத்து’

ஆண்டாள்- ‘பாலாலிலையில்’

திருமழிசையாழ்வார்- ‘இலங்கை’ ‘சங்குதங்கு’ ‘மரங்கெட’ ‘சாலிவேலி’ ‘செழுங்கொழும்’ ‘நடந்தகால்கள்’ ‘நாகத்தணை’

திருமங்கையாழ்வார்— ‘ஆவியே அமுதே’ ‘இப்பிறப்பு’ ‘ஊரான் குடந்தை’ ‘அன்றுயர்’ ‘வாளாய’ ‘குயிலாலும்’ ‘வாராரும்’ ‘பொங்கேறு’ ‘கிடந்தநம்பி’ ‘வந்தநாள்’ ‘பேரானை’ ‘வந்தாய்’ ‘தோடவிழ்’ ‘வானையாரமுதம்’ ‘இங்கேபோதுங்கொலோ’ ‘அறியோமே’ ‘அண்டத்தின்’ ‘மூவரில்’ ‘காவியை வென்ற’ ‘பொங்கார்’ ‘முற்றாரா’ ‘அன்றுயர்’ ‘ஒருபேருந்தில்—செல்வம் மல்கு’ ‘காரார்குடந்தை’ ‘பொன்னி மணி’

பூசத்தாழ்வார்— ‘தமருள்ளம்’ ‘எங்கள் பெருமாள்’

பேயாழ்வார்— ‘சேர்ந்த திருமால்’ ‘விண்ணகரம்’

நம்மாழ்வார்— ஆராவமுதே 11 (ஆக-பா 51) ஸ்டேஷன் கும்பகோணம்.

15. திருக்கண்டியூர்-கண்டனபுரம்:- அரன் சாபந்தீர்த்த பெருமாள். கிழக்கேதிருமுகமண்டலம். நின்ற திருக்கோலம். கமலவல்லி நாச்சியார். கமலாக்ருதி விமானம். கபால தீர்த்தம். ருத்ரனுக்கு கபாலநிவ்ருத்தி செய்தவர். அகஸ்தியருக்கு ப்ரத்யக்ஷம்.

திருமங்கையாழ்வார்- 'பிண்டியார்' தஞ்சாவூர் ஸ்டேஷனிலிருந்து 5 மைல்.

16 திருவிண்ணகர்- உப்புலியப்பன்கோயில் உப்புலியப்பன். கிழக்கே திருமுகமண்டலம். நின்ற திருக்கோலம். பூமிதேவி நாச்சியார். விஷ்ணு விமானம். ஆர்த்திபுஷ்கரிணி. மார்க்கண்டேயருக்கும், பெரிய திருவடிக்கும், தர்மதேவதைக்கும், காவேரிக்கும் ப்ரத்யக்ஷம். மிருகண்டு ரிஷியின் பத்நியின் விருப்பத்தின்படி உப்பில்லாத ப்ரஸாதமே நிவேதநம். திருவேங்கடமாகவே எண்ணி ப்ரார்த்தனை செலுத்துபவர் பலர்.

திருமங்கையாழ்வார்- வண்டுணு 10. பொறுத்தேன் 10. துறப்பேன் 10 'பத்தராவியை' 'அன்றயர்' 'காரார் மணிநிறக் கண்ணனூர் விண்ணகரம்' 'மின்னிடையாள் நாயகனை விண்ணகருள் பொன்மலையை'.

பொய்கையாழ்வார்- 'வேங்கடமும்'.

பேயாழ்வார்- 'பண்டெல்லாம்' 'விண்ணகரம்'.

நம்மாழ்வார்- நல்குரவும் 11. இவ்வூர் திருநாகேச்வரம் ஸ்டேஷனிலிருந்து 1 மைல்.

17. திருக்கண்ணபுரம்:- சௌரிராஜன் கிழக்கே திருமுகமண்டலம். நின்ற திருக்கோலம். கண்ணபுரநாயகி. உத்பலாவர்த்தக விமானம். நித்ய புஷ்கரிணி. கண்வமுனிக்கு ப்ரத்யக்ஷம்.

பெரியாழ்வார்- 'உன்னையும்'

ஆண்டாள்- 'காட்டில்'

குலசேகராழ்வார்- மன்னுபுகழ் 11

திருமங்கையாழ்வார்-சிலையிலங்கு 10. தெள்ளியீர் 10. கரையெடுத்த 10. விண்ணவர் தங்கள் 10. தந்தைகாலில் 10. தொண்டீர் 10. வியமுடை 10. வானோர் 10. கைம்மானம் 10. வண்டார் 10. 'கன்று மேய்த்து' 'செங்கால' 'சீரார் கணபுரம்' 'மன்னு கண்ணபுரத்து' 'சண்ணனை கண்ணபுரத்தானை'

நம்மாழ்வார்-மாலைநண்ணி 11. (ஆகபா 128) திருக்கண்ணபுரம் நன்னிலம் ஸ்டேஷனிலிருந்து $4\frac{1}{2}$ மைல்.

18. திருவாலி-திருநகரி:- வயலாலி மணவாளன். மேற்கே திருமுகமண்டலம். வீற்றிருந்த திருக்கோலம். அம்ருதகடவல்லி. அஷ்டாக்ஷர விமானம். இலாக்ஷணி புஷ்கரணி அலாதநிகஞ்ஜம ப்ரஜாபதிக்கும், திருமங்கையாழ்வாருக்கும் ப்ரத்யக்ஷம். இங்கு திருமகள் எம்பெருமானை ஆலிங்கனம் செய்தமையால் ஆலியாயிற்று. திவ்யதேசக் கணக்கில் ஒன்றாயிருப்பினும் இது இரண்டு ஊர்களாயுள்ளது. திருவாலியில் நாஸிம்ஹன் ஸந்நிதியும், அங்கிருந்து 2 மைலிலுள்ள திருநகரியில் வயலாலி மணவாளன் ஸந்நிதியுமிருக்கின்றன.

குலசேகராழ்வார்- 'ஆலிநிலைப் பாலகனாய்'

திருமங்கையாழ்வார்- 'அன்றுபர்'வந்து 10 தூவிரிய 10. கள்வன்கொல் 10. 'சிந்தை தன்னுள்' 'முந்நீரை' 'எஞ்சா' 'கற்றார்' 'வேலையாலிலை' 'படை நின்ற' 'தூயானை' 'நெஞ்சுருகி' 'பேராலி' 'மாமலர்' (ஆக பா 42) சீகாழி ஸ்டேஷனிலிருந்து 6 மைல்.

19. திருநாகை-நாகப்பட்டணம்:- ஸௌந்தர்யராஜன். கிழக்கே திருமுகமண்டலம் நின்ற திருக்கோலம். ஸௌந்தர்யவல்லி. ஸௌந்தர்ய விமானம். ஸார புஷ்கரணி. நாகராஜனுக்கும், திருமங்கையாழ்வாருக்கும் ப்ரத்யக்ஷம்.

திருமங்கையாழ்வார்-:பொன்னிவர்மேனி 10 (ஆக பா 10) நாகப்பட்டணம் ஸ்டேஷன்.

20. திருநறையூர்-நாச்சியார் கோயில்:- நம்பி. கிழக்கே திருமுகமண்டலம். நின்ற திருக்கோலம். நம்பிக்கை நாச்சியார். ஸ்ரீநிவாஸ விமானம். மணிமுக்தா நதி. மேதவமுனியின் கன்னிகையை 'பலிமி' என்ற அஸுரன் பிடித்துக்கொண்டு போக அவனைச் சபித்து மேதவ முனிக்கு அருள் செய்தவர்.

திருமங்கையாழ்வார்- 'அன்றயர்' 'சிந்தை தன்னுள்' 'மானேய்' கண்ணும் சுழன்று 10 கலங்க 10. அம்பரமும் 10. ஆளும் பணியும் 10. மான் கொண்ட 10. பெடையடர்த்த 10 கிடந்த நம்பி 10. கறவா மடநாடு 10. புள்ளாயேனமுமாய் 10. சினவில் 10. 'பரனே' 'நீநிலாமுற்றத்து' 'சுடலையில்' 'கன்று மேய்த்து' 'பொங்கார்' 'பேராலி தண்கால் நறையூர்' 'கண்ணனே' 'தென்னறையூர்' (ஆக பா110) கும்பகோணம் ஸ்டேஷனிலிருந்து 6 மைல்.

(தொடரும்)

ஸ்ரீ:

காஞ்சீபுரத்தில் எங்கள் சொந்த தறியில் தயார் செய்யும் பட்டு சேலைகள்

காஞ்சீபுரம் விலைக்கே சேலத்தில் கொடுக்கப்படும்

கல்யாணகாலத்தை முன்னிட்டு

காஞ்சீபுரம், கொள்ளேகாலம், தருமாவரம், ஆரணி, பட்டு சேலைகள், கண்ணைக் கவரும் சிறந்த நாகரீகமான பார்டர்கள் 6 கெ, 8 கெ, 9 கெ, 9½ கெஜம் சேலைகள் ஏராளமாக ஸ்டாக் செய்திருக்கிறோம்

வெண்பட்டு 10X6, நூல்கோர்வை, சரிகைபேட் 10X6, 8X8, 9X9, ஜோடிகளும் மிகவும் மலிவான விலையில் கிடைக்கும்

எங்கள் கடைக்கு நேரில் விஜயம் செய்து ஜவுளிகள் வாங்கி திருப்தி அடையக் கோருகிறோம்.

கந்த விலாஸ்

காஞ்சீபுரம் ஜவுளிக்கடை

அ. கந்தசாமி முதலியார் & சன்ஸ்

போன் நெ. 123: கடை வீதி: சேலம் 1.

உரிமையாளர்:- அ. க. தங்கவேல் முதலியார்.

ஹெட் ஆபீஸ்:- காந்திரோடு, காஞ்சீபுரம். போன்: 12.

பிராஞ்சுகள்:-	போன்: 71557,	போன்: 121,	போன்: 123,
213, தங்கசாலை தெரு	மைலாப்பூர்	கீழ ரதவீதி	கடை வீதி
மதராஸ்-1.	மதராஸ்-4.	திருநெல்வேலி	சேலம்-1.

மேட்டூர், பென்னி மில் ஜவுளிகளும் கிடைக்கும்.

ஸ்ரீ:

43-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் ஸஞ்சாரக்ரமம்

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

பங்குனிமீ 30வ மந்தாசூரில் உள்ள ஸ்ரீ வைஷ்ணவ ஷேட்டுகள் அன்று ததியாராதனையை அவர்கள் சக்திக்குத் தகுந்தமாதிரி நடத்திவைத்தார்கள். அன்று ராத்திரி புறப்பட்டு 10 மைல் தூரத்திலுள்ள பிப்பில்காம் எழுந்தருளியாயிற்று. அன்று ஹேவிளம்பி வருஷப்பிறப்பு. சித்திரைமீ 1வயும் மறுநாளும் அவ்விடமே எழுந்தருளியிருந்தார். அவ்விடம் டெல்லியிலிருந்து டெல்லியிலுள்ளவர்கள் அனுப்பியதாக ஸ்ரீ கோதண்டராமய்யங்கார் என்பவர் வந்து, புஷ்கரம் எழுந்தருளினதும் தகவல் தெரிவிக்கவேண்டுமென்றும், பம்பாயில் ஆராதித்ததுபோல் டில்லியிலும் (தலைநகரிலும்) விசேஷமாக ஆராதிக்க ஆஸைப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதை விஜ்ஞாபிப்பதற்காகத் தன்னை அனுப்பினதாகவும் விஜ்ஞாபித்தார். ஸங்கல்பத்திற்கு முன்னடியே பதரி போய்விட்டு வரலாமென்கிற உத்தேசமிருப்பதால் பதரியிலிருந்து திரும்புகாலில் டில்லி வரலாமென்றும், அப்போது டில்லிவாஸிகள் எத்தனை நாள் ஆராதிக்க ஆசைப்படுகிறார்களோ அத்தனை நாள் ஆராதிக்கட்டும் என்றும் ஏப்ரல் மீ கடைசியில்புஷ்கரம் எழுந்தருளப் போவதாகவும் ஸாதிக்கும்படியிருந்தது.

ஹேவிளம்பி வரு சித்திரைமீ 2ந்தேதி புறப்பட்டு 10 மைல் தூரமுள்ள சாலுடு வென்கிற இடத்திற்கெழுந்தருளினர். 3வ ராத்ரி புறப்பட்டு 11 மைல் தூரத்திலுள்ள நீமச் எழுந்தருளினர். நீமச்சில் ஜாவதிலிருந்து ஷேட்டுகள் ஒரு நாள் தாமதமும், சுற்றுகவுமிருந்தாலும் தங்களூருக்கு அவசியம் எழுந்தருளவேண்டுமென்று ஸ்ரீஹரிகிருஷ்ணலால்முச்சாலைக்கொண்டு பிரார்த்தித்ததின்பேரில் 12 மைல் தூரத்திலுள்ள ஜாவதிற்கு எழுந்தருளினர். ஊருக்கு ஸமீபமாயுள்ள பெரிய மில் கட்டிடத்தில் எழுந்தருளப்பண்ணி ஆராதித்தார்கள். அவ்விடம் சில பெருமாள் ஸம்பந்தம் வேண்டுமென்று ஸமாச்ரயணம் பண்ணிக்கொண்டதுடன் அவர்களுடைய குழந்தைகளுக்கும் ஸமாச்ரயணம் பண்ணிவைத்தார்கள். தங்கள் கிராமத்தில் வீதியில் எழுந்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். ஸாயங்காலம் பெருமாள் பல்லக்குடன் தந்தப்பல்லக்கில் பட்டணப்ரவேசம் எழுந்தருளியாயிற்று. அன்று ராத்திரி புறப்பட்டு 15 மைல் தூரமுள்ள நிம்பாரா எழுந்தருளினர். சித்திரைமீ 6வ ராத்திரி புறப்பட்டு 16 மைல் தூரமுள்ள சித்தோர்கா (சித்தூர் கோட்டை என்று ப்ரஸித்தம்) எழுந்தருளினர். அவ்விடப்பெரியயானைபடுத்துக்கொண்டது பழைய புண்ஸரியாக ஆருதபடியால் அதனிஷ்டப்படி எழுந்து நிற்க முடியாமல் சிரமப்பட்டு மோட்டார் உதவியால் எழுந்திருக்கும்படிநேர்ந்தது. ஆறிவந்த காயங்கள் மறுபடியும் புண்ணுகப் போய்விட்டது. அதற்கு வேண்டிய சிகித்ஸை செய்யப்பட்டு வருகிறது. 8வயும் அவ்விடமே எழுந்தருளியிருந்தார். அவ்விடம் மலைமேல் ரஜபுத்ரர்களின் பழைபகோட்டையிருக்கிறது. அந்த இடத்தில் மீராபாய் பக்தியுடன் பகவானைத் தியானித்துக்கொண்டிருந்தாளென்றும், சரித்திரப்ரஸித்தி பெற்ற ராணுக்களின் கோட்டையென்றும் சொல்கிறார்கள்.

புஷ்கரம் ஷேட் ஸ்ரீராம்குமார் தன் மனுஷ்யனை அனுப்பி அங்கிருந்தே வேண்டிய ஸௌகர்யங்களுடன் பெருமாளை எழுந்தருளப்பண்ணி வரவேண்டுமென்று திட்டமிட்டிருந்தார் வெய்யிலின் கடுமையால் பசுமாடுகள் வண்டிமாடுகளில் சிலதுகளுக்கு கோமாரி ஏற்பட்டிருந்தது. அவைகளை ரயிலில் ஆஜ்மீர் வழியாக புஷ்கரத்திற்கு அவர்கள் மூலமாக அனுப்பும்படியிருந்தது. 8வ ராத்திரி அவ்விடமிருந்து புறப்பட்டு 15 மைல் தூரமுள்ள கங்ராரார் எழுந்தருளினர். அன்று ராத்திரி புறப்பட்டு 10 மைல் தூரமுள்ள அமிர்காட் எழுந்தருளினர். கங்காரில் ஸ்ரீமடத்தின்

ஹிந்தி ந்ருஸிம்ஹப்ரியை நடத்துபவரான
பர்லி ஸ்ரீ ராகவாசாரியர் ஸ்ரீ அழகியசிங்கரை
வந்து தெண்டன் ஸமர்ப்பித்தார். இரண்
டொரு நாள் கூட ஸஞ்சாரத்தில் வருவதாக
வும் விஜ்ஞாபித்தார். 10உ ராத்திரி புறப்
பட்டு 12மைல் தூரத்திலுள்ள பில்வாரா எழுந்
தருளினர். காலை 10 மணி சுமாருக்கு புஷ்க
ரம் ஷேட் ஸ்ரீராமகுமார் தன்னுடைய தேஹ
அசக்தியை (முழங்கால்கள் இரண்டும் பிடிப்பு)
யும் கவனியாமல் வந்து தெண்டன் ஸமர்ப்
பித்துவிட்டு விசேஷ ஸம்பாவனை செய்து
பெருமாள் புஷ்கரம் எழுந்தருளவேண்டும்
என்று பிரார்த்தித்தார். புஷ்கரத்தை உத்
தேசித்தே உஜ்ஜயினியிலிருந்து புறப்பட்டு
வருகிறபடியால் அவசியம் எழுந்தருளுகிறோர்
என்று ஸாதிக்கும்படியிருந்தது. அது பெரிய
டவுனானபடியால் விசேஷஜனங்கள் பெருமாளை
வந்து ஸேவித்துப் போனார்கள். ரொம்பவும்
ஜனங்கள் கூடி பிரார்த்தித்தபடியால் ராத்திரி
பகவந்நாமபஜனை ஆனபிறகு பகவந்நாமத்தின்
மாஹாத்ம்யத்தைப்பற்றி ஹிந்தியில்15நிமிஷம்
ஸ்ரீ அழகியசிங்கர் ஸாதிக்கும்படியிருந்தது.
பிறகு பர்லி ராகவாசாரியாரைக்கொண்டு
மடத்தின் விசேஷ பெருமைகளை விஸ்தாரமா
கச் சொல்லும்படி நியமித்துவிட்டு எழுந்தரு
ளியாயிற்று. ரொம்பவும் ஜனங்கள் திரண்டு
வந்திருந்தபடியால் அவரும் மடத்தின் பெரு
மையை உத்ஸாஹமாக எடுத்துச் சொன்னர்.
சாயங்காலம் ஸ்ரீராமகுமார் ஷேட் ஸ்ரீஸந்நிதி
யில் நியமனம் பெற்றுக்கொள்ளும்போது அவ
ரிடம் ஸ்ரீ அழகியசிங்கர் நம் மடத்தின் பெரு
மையையும், பெருமாளுடையவும், ஸம்ப்ரதா
யத்தினுடையவும், ஸ்தானத்தினுடையவும்
மேன்மைகளை எடுத்துச் சொல்லி, இதற்கு
அனுகுணமாக புஷ்கரம் கோவிலிலும் எல்லாக்
கார்யங்களும் நடக்கவேண்டுமென்று ஸாதிக்
கும்படியிருந்தது. அவரும் அவ்விஷயங்களைக்
கவனமாகக் கேட்டுக்கொண்டு நியமனம் பெற்
றுப் போனர். ஸ்தலத்திலிருந்தே அடிக்கடி
ஸ்ரீஸந்நிதிக்கு வந்துகொண்டிருந்த கோவில்
துறையாரும், ஷேட்டின் ஏஜண்டுகளும், பர்லி
ராகவாசாரிடரும் அச்சமயம் மறுபடியும் ஸ்ரீ
அழகியசிங்கர் ஷேட்டுக்கு நேரே ஸாதிக்கும்
விஷயங்களைக் கூடயிருந்து கேட்டுக்கொண்டி
ருந்தார்கள். அன்று ராத்திரி புறப்பட்டு 19
மைல் தூரமுள்ள ராயலாரோட் எழுந்தருளி
னர். 12உ ராத்திரி புறப்பட்டு 15 மைல்
தூரத்திலுள்ள விஜயநகர் ஸமீபமுள்ள பர்லே
என்கிற இடத்தில் ஆற்றோர ஸமீப பங்களா
வில் எழுந்தருளியிருந்தார். அவ்விடத்தில்
ஆராதகர் வடுவூர் ஸ்ரீராமபத்ராசாரியர் சித்
திரை மீ 11உ பரமபதித்துவிட்டதாக புஷ்
கரத்திற்கு வந்த தந்தி சமாசாரத்தை புஷ்க
ரத்திலிருந்து மனுஷ்யாள் கொண்டுவந்திருக்கி
றார்கள் என்று ஸ்ரீ ஸந்நிதியில் விஜ்ஞாபிக்கப்
பட்டது. அதைக் கேட்டுவிட்டு அவருக்குக்
கால் குறைவு ஏற்பட்டதோடு போய்விடும்.
பிராணாபத்து வராது என்று எதிர்பார்த்தி
ருந்ததற்கு நேர் மாறாக ஆகிவிட்டது. பக
வத்ஸங்கல்பத்தையும், கர்மங்களின் வைசித்ரி
யத்தையும் ஒன்றையும் ஒருவராலும் சொல்ல
முடியவில்லை. ஸ்ரீ ஸந்நிதியில் விசேஷ ப்ரதி
பன்னரும் வடதேச யாத்திரையில் மிகவும்
உத்ஸாஹமுள்ளவருமான அவர் வடதேசயாத்
ரைக்குக்கூட வராமற்போனாலும் இந்தலோகத்
திலேயாவது இருந்துகொண்டிருக்கலாம்.
இதையும்விட்டுவிட்டுப்போய்விட்டார் என்று
ஸாதித்துவிட்டு அவர் குமாரர்களான ஸ்ரீஸந்
நிதியிலுள்ள நரஸிம்ஹன், உப்பிலிஇவர்களுக்கு
ஆறுதலைச் சொல்லி கைங்கர்யத்தை நன்றாக
நடத்திவிட்டு வரும்படி நியமித்து அனுப்பி
வைக்கும்படியிருந்தது. மறுநாள் த்வாதசி
அங்கேயே எழுந்தருளியிருக்கும்படியிருந்தது.
அன்று ராத்திரி புறப்பட்டு 21 மைல் தூர
முள்ள ஜடாவாஸா எழுந்தருளினர். சனிக்
கிழமை ராத்திரி புறப்பட்டு 14 மைல் தூரத்
திலுள்ள ஆஜ்மீர் எழுந்தருளினர். அவ்விட
மிருந்து அன்று ராத்திரி புறப்பட்டு 10மைல்
தூரமுள்ள புஷ்கரம் எழுந்தருளினர். புஷ்க
ரம் தீர்த்தகட்டத்திற்கு சுமார் 1 மைல் முன்
னதாகவுள்ள ஷேட்டின் பங்களாவிற்கு ராத்
திரி 1 மணிசுமாருக்கு எழுந்தருளினர். அங்
கிருந்து காலை அபிகமனம் பண்ணிக்கொண்டு
வீதிப்ரமணமாக எழுந்தருளவேண்டுமென்று

ஷேட்டு குடும்பத்தாரின் அபிப்ராயமென்றும் அதனால்தான் இவ்விடத்திலேயே எழுந்தருளியிருக்கவேண்டுமென்று ப்ரார்த்திக்கப்பட்டது என்று விஜ்ஞாபித்தார்கள். புஷ்கரஸ்நானத்தையே ப்ரதானமாகக்கொண்டுபுஷ்கரத்திற்கு வருகிறபடியால் மறுநாள் ஸோமவார அமாவாசையாயிருக்கிறபடியாலும் ஒரு மைல் தூரத்தில் தங்கினால் தீர்த்தாமாடிவிட்டுவந்து ஆராதனம் பண்ணிக்கொண்டு மறுபடி போவது ஸாத்யமாகாது என்றும், அவர்கள் பங்களாவானபடியால் கொஞ்சநேரம் அவ்விடம் தங்கிவிட்டு பின்மாலை மறுபடியும் தீர்த்தகட்டத்திற்கே பெருமாளுடன் போகவேண்டுமென்றும் தன் திருவுள்ளத்தை சொல்லியனுப்பும்படியிருந்தது. அந்தப்படியே பிம்மாலை 4-30 மணிக்குப் புறப்பட்டு பெருமாளுடன் புஷ்கரம் எழுந்தருளி புஷ்கரம் ஸ்ரீரமாவைகுண்டன் ஸந்நிதியில் வெளிப்பிராகாரத்தில் (காலஞ்சென்ற) ஸ்ரீமங்கனிராம் பங்களாவில் பெருமாளுடன் எழுந்தருளி பெருமாளை அங்கு எழுந்தருளப்பண்ணிவிட்டு புஷ்கரதீர்த்தத்திற்கு நீராட எழுந்தருளி அனுஷ்டானங்களை முடித்துக்கொண்டு காலை 7மணிக்கு எழுந்தருளியாயிற்று. ஷேட் ஸ்ரீராமகுமாரரும் அவருடைய தமையன் பேரன் நரசிங்கபாபு, அவர் குமாரரும் அவர் குடும்பத்தாரும் எதிர்கொண்டழைத்தார்கள். அன்று புஷ்கரதீர்த்தத்தினால் பெரிய பெருமாளுக்குத் திருமஞ்சனம் கண்டருளப்பண்ணியாயிற்று. சுமார் ஒரு வாரகாலமாகவே பெருமாளை வழியில் ஆராதித்துவந்த ஷேட் குடும்பத்தார் புஷ்கரத்தில் எழுந்தருளியிருந்த நான்கு நாளும் விசேஷமாக ஆராதித்தார்கள். திருமஞ்சனம் நடக்கும்போதும் அவர்கள் குடும்பத்துடன் வந்து பெருமாளை ஸேவித்தார்கள்.

புஷ்கரம் ஸ்ரீரமாவைகுண்டன் ஸந்நிதியில் தம்முடைய திருவுள்ளத்திற்கு அனுசிதமென்றும் ஸம்ப்ரதாயவிருத்தமென்றும் ஏற்படுகிற சில கார்யங்கள் (இதுதான் ஷேட்டிடம் மறுபடி நேரில் பில்வாராவில் ப்ரஸ்தாபிக்கப்பட்டது) மாற்றியமைக்கவேண்டியதாக ஏற்பட்டிருக்கிறது. கார்யங்கள் மாற்றியமைக்கப்பட்ட பிறகே தான் யதாக்ரமமாக ஸ்ரீ ஸந்நிதிக்கு வருவது உசிதமாயிருந்தாலும் ஸாதாரணரீதியில் கோவிலையும் பகவந்மூர்த்தியையும் கண்டு களிப்பது இப்போது செய்யக்கூடிய உசிதமான கார்யமென்று திருவுள்ளத்தில் பட்டபடியால் அபிகமன ஆராதன கோஷ்டியானதும் கோவிலுக்கு வருவதாக ஷேட்டிடம் ஸாதித்துவிட்டு கோவிலுக்கு எழுந்தருளி கோவிலின் அமைப்புக்களையும் பகவானுடைய திவ்யமங்களவிக்ரஹத்தையும் கண்டு களித்து உள்ளங்குளிர்ந்தாயிற்று. தங்களுடைய மனோரதப்படியும், யதாக்ரமமாகவும் கோவிலுக்கு எழுந்தருளி எல்லா மரியாதைகளையும் ஸ்வீகரிக்காமல் எழுந்தருளினதில் அவர்களுக்குக் கொஞ்சம் குறையிருந்தும் தானே உவந்து எழுந்தருளினதைப்பற்றி அதிக ஸந்தோஷமும் பட்டார்கள். அவ்விடம் தன் திருவுள்ளப்படி எல்லாரும் உகக்கும்படியாக எப்படி கார்யங்கள் செய்யவேண்டுமென்பதையும் அதை உடனே செய்துவிடுவதில் ஒன்றும் ச்ரமமில்லையென்றும் பலபேர் அபிப்ராயங்களைத் திரட்டிச் செய்யவேண்டுமானால்தான் விளம்பமும், எதிர்ப்பும் நேரக்கூடுமென்றும் அதுகள் விஷயத்தில் எப்படி உசிதமோ ஸௌகர்யமோ அப்படிச் செய்யலாமென்றும் ஸாதிக்கும்படியிருந்தது. 18ந்தேதி ஸாயங்காலம் தீர்த்தப்ரதக்ஷிணமாக எழுந்தருளியாயிற்று. அன்று காலை ஸ்ரீபாஷ்யகாரர் திருநக்ஷத்ரத்தை உத்தேசித்து ஸேவை பாராயண உபக்ரமங்கள் நடந்தது. 19வ புதன் கிழமை அபிகமன ஆராதன கோஷ்டியானதும் புறப்பட்டு திரி புஷ்கரத்தில் ஒன்றான 5மைல் தூரமுள்ள வ்ருத்தபுஷ்கரத்திற்கு எழுந்தருளி அவ்விடம் நீராட்டம் செய்துகொண்டு கயாகுண்டத்திற்கும் எழுந்தருளி அங்கிருந்து இரண்டாவதான மத்ய புஷ்கரத்திற்கு எழுந்தருளி அங்கும் நீராட்டம் செய்து கொண்டு மூன்றாவதான புஷ்கரராஜ் என்று சொல்கிற புஷ்கரதீர்த்தத்திற்கும் எழுந்தருளி அவ்விடம் மாத்யாஹ்நிகஸ்நானம் செய்துவிட்டு ஸ்ரீஸந்நிதிக்கு எழுந்தருளி இஜ்யை மங்களஹாரத்தி நடந்தது. 20வ அக்ஷயத்ருதியையன்று நல்ல

காளாகவிருப்பதால் அன்றே அவ்விடமிருந்து பதரியை உத்தேசித்து யாத்ரையாகப் புறப்படலாமென்று திருவுள்ளம்பற்றி அது விஷயத்தைக் காலையில் பெருமாளை ஸேவிக்கவந்த ஷேட்டிடமும் அவர் குடும்பத்தாரிடமும் சொல்லி அவர்களுக்கு யதோசித ஸன்மானத்தையும் செய்துவிட்டுப் பின்னும் ஒருதரம் கோவிலுக்கு எழுந்தருளி பெருமாள் மூர்த்திகளையும், அவ்விடம் ப்ரதக்ஷிணத்தில் எழுதப்பட்டிருக்கிற சித்திரங்களையும் விசதமாகக் கண்டு களித்துவிட்டுப் பெருமாளிடத்திலும் அனுமதி பெற்றுக்கொண்டு வரப்போவதாகவும், பகவத்ஸங்கல்பமிருந்தால் உங்களுடைய குறைகளும் நீங்கி, யதாவஸ்திதமாக எல்லா மரியாதைகளையும் உங்களிஷ்டப்படியே ஸ்வீகரித்துக்கொள்ளும்படியும் ஸௌகர்யப்பட்டால் சில காலம் புஷ்கரத்தில்கூட வஸிக்கும்படியும் கூட திரும்புகாலில் சேரலாமென்றும் உங்களுக்கு இன்னும் அதிக நாள் ஆராதிக்க ஆஸ்தையிருந்தால் அதை கல்கத்தா எழுந்தருளும்போது செய்யலாமென்றும், கல்கத்தாவில் இப்போது நிர்மாணிக்கப்பட்டுவரும் கோவிலில் திருவுள்ளப்படி கார்யங்கள் நடக்க ஸந்தர்ப்பமிருந்தால் அந்த கோவில் கட்டிடவேலையும் அவ்விடம் எழுந்தருளுவதற்குள் பூர்த்தியாகும்படியிருந்தால் அவ்விடம் உங்களுடைய பரிபூர்ண மனோரதத்தின்படி நடக்க ஸௌகர்யமுண்டு என்றும் ஸாதித்துவிட்டு முதல் நாள் எழுந்தருளின கிராமமாகவே கோயிலுக்கு எழுந்தருளி பெருமாள்களுக்கு 2 பட்டும் ஸமர்ப்பித்துவிட்டு மண்டபத்தில் எழுந்தருளி கோஷ்டியாக தசாவதாரஸ்தோத்ரத்தை அனுஸந்தித்துவிட்டு உபசாரங்களை விநியோகம் பண்ணச்சொல்லி பெருமாளிடம் அனுமதி பெற்றுக்சொண்டு வெளி வீதி ப்ரதக்ஷிணமாக எழுந்தருளி பின்புறமுள்ள வெள்ளிக்கிழமை மண்டபத்தையும் கடாக்ஷித்துவிட்டு ஆச்ரமத்திற்கு எழுந்தருளினார்.

ஸ்ரீரமாவைகுண்டன் ஸந்நிதியில் மூலவர் ரமாவைகுண்டர் என்றும் உத்ஸவர் திருவேங்கடமுடையான் என்றும் (ஸ்ரீநிவாஸனென்றும், வலது புறத்தில் பிராகாரத்தில் அலர்மேல்மங்கை ஸந்நிதியும் இடது புறத்தில் ஆண்டாள் ஸந்நிதியும் அமைந்துள்ளது. அன்று ராத்திரி அக்ஷயத்ருதியைக்காக முன்னாடி வலது புறமுள்ள மண்டபத்தில் சேஷவாஹநத்தில் பெருமாளுக்கு சயநதிருக்கோலம் சாத்துப்படி ஸமர்ப்பிக்கிறார்கள். ராத்திரி ஸ்ரீ அழகியசிங்கர் பாதுகாபூஜைபண்ணவேண்டுமென்று ஷேட் ப்ரார்த்தித்து குடும்பத்தாருடன் பம்பாயில் மோஹிநி மஹாலில் நடத்தினமாதிரி பாதுகாபூஜையும் செய்து விசேஷ ஸம்பாவனையும் செய்தார்.

அந்த ஸமயம் ஸஞ்சாரத்தை உத்தேசித்து பெருமாள் திருப்பொட்டாரத்தில் எழுந்தருளிவிட்டார். மறுநாள் ஒரு நாள் எழுந்தருளியிருக்கவேண்டுமென்றும், முதலில் மனோரதித்த வீதி உத்ஸவத்தைச் செய்யப்போவதாயும் ஒரு மைல் தூரமுள்ள முன் பெருமாள் எழுந்தருளின பங்களாவிலேயே எழுந்தருளியிருக்கலாமென்றும் ஷேட்டின் அபிப்ராயம் என்றும் எல்லோரும் விஜ்ஞாபித்தார்கள். அது விஷயமாக திருவுள்ளச் சீட்டு போடும்படி நியமனமாகி போட்டு ஷேட்டே அதை எடுத்ததில் ஆஜ்மீருக்கே எழுந்தருள பெருமாள் அதன் மூலம் நியமித்தபடியால் அன்று ராத்திரி புறப்பட்டு ஆஜ்மீருக்கு எழுந்தருளியாயிற்று. ஆஜ்மீரில் அன்னாஸாகர் ஏரி ஸமீபத்திலுள்ள ராமானுஜகூடத்தில் எழுந்தருளியிருந்தார். அதன் பக்கத்தில் அங்கும் ஒரு ரமாவைகுண்டன் ஸந்நிதி நிர்மாணித்துக் கொண்டிருக்கிறார்கள். அன்னாசாகர் தீர்த்தமும் புஷ்கரதீர்த்தம் மாதிரி அமைந்திருப்பதுடன் அதிக விஸ்தாரமாயும் நல்ல தீர்த்தத்துடன் கூடியிருந்தது. அங்கு எழுந்தருளியிருந்த இரண்டு நாளும் இரண்டு வேளையும் அந்த தீர்த்தத்தில் நீராட்டம் கண்டருளும்படியிருந்தது. சித்திரைமீ 22உ சனிக்கிழமை பாஷ்யகாரர் திருநக்ஷத்திரம் சாற்றுமறை ஸம்பாவனைகள் நடந்தது. மாடுகளுக்கு கோமாரிக்கு வேண்டிய சிகித்ஸைகளை வைத்யர்களைக்கொண்டு புஷ்கரத்தில் செய்துவைத்தபடியால் கொஞ்சம் அனுகூலம் ஏற்பட்டது.

(தொடர்ச்சி 127-ம் பக்கம் பார்க்க)

ஸ்ரீ:

ஸ்ரீ வடுவூர் ஆராதகர்ஸ்வாமியின் நிர்யாணம்

பல வர்ஷங்களாக ஸ்ரீ ஸந்நிதியில் ஸ்ரீ ந்ருஸிம்ஹனுக்கு உகந்த, உயர்ந்த திருவாராதனகைங்கர்யத்தில் ஈடுபட்டிருந்தவரும், நல்ல சாஸ்த்ரஜ்ஞரும், அநுஷ்டானபரருமான ஸ்ரீ. உப வித்வான், வடுவூர், புராணம், ராமபத்ராசாரியர் ஸ்வாமி பரமபதித்து விட்டார் என்ற செய்தியைக் கேட்டு லீலாவிபூதியில் உள்ள நம்போன்றவர்கள் வருந்துகிறார்கள். லீலாவிபூதியே தாத்காலிகமானபடியால் இங்குள்ள கைங்கர்யமும் அதுபோலத்தானே. ஆகவே நித்யவிபூதிக்கு எழுந்தருளி நித்யகைங்கர்யம் செய்யும்படி எம்பெருமான் ஸங்கல்பித்தான் என்று கூறுவது சாஸ்த்ர ஸம்ப்ரதாய மர்யாதை. ஆயினும் குடும்பத்திலுள்ளவர்களுக்கும், ஸமூஹத்தில் உள்ளவர்களுக்கும் ஈடு செய்யமுடியாத ஒரு நஷ்டத்தை (பிரிவை) உண்டாக்கி விட்டு, சாஸ்த்ரம், ஸம்ப்ரதாயம், தர்மசாஸ்த்ரஜ்ஞாநம் இவைகளை எல்லாம் ப்ரவர்த்திப்பவர்களுக்கும் ஒரு பிரிவையும் ஏற்படுத்திவிட்டு, பரமபதித்தார் என்பது மறக்கமுடியாத ஒரு கஷ்டம். இம்மஹானுடைய குடும்பத்திலுள்ளவர்களுக்கு நமது அநுதாபத்தைத் தெரிவித்து நாமும் சேர்ந்து அம் மஹானின் ஆத்மசாந்திக்காக ப்ரார்த்திப்பது தவிர நாம் வேறொன்றும் செய்வதற்கில்லை. (ஸம்பாதகர்)

2

காளத சித்திரை மீ 11 வ (23-4-57) செவ்வாய்க்கிழமை மாலை வடுவூர், மாடபூஷி, புராணம், வித்வான், ஸ்ரீ. உப. ராமபத்ராசாரியர்ஸ்வாமி, ராமபத்ராதிஷ்டிதமாய் தக்ஷிண அயோத்தி என்றும் வடுவூர் என்றும் ப்ரஸித்தமான ஸ்வக்ராமத்தில் பரமபதித்த செய்தி கேட்க ஸாதுக்கள் மனம் பதைக்கும். அதன் முந்திய வாரம் சித்திரை 4வ தான் ஷை யூர் உத்ஸவம் திருத்தேர் வரை ஸேவித்து விட்டு ஷை ஸ்வாமியை தண்டம் ஸமர்ப்பித்து வெகு காலம் ஸம்பாஷணைக்குப் பின் விடை கொண்டேன். அடியேன் அதிபால்யம் முதல் ஷை ஸ்வாமியிடம் பரிசிதன். 'ருஷே: கண்வஸ்ய புத்ரேண கண்டுநா பரமர்ஷிணு' என ஸதாசாரசீலரான ஸ்ரீநிவாஸாசாரியர் ஸ்வாமிக்கு ஜநித்து, அவரிடம் பால்யம் முதல் வேதாத்யயன ப்ரபந்தசிக்ஷணம் நன்கு பெற்று, பின்பு யுக்தகாலத்தில் ப்ரஸித்த பண்டிதப்ராதாக்களாக விளங்கிய ஸ்ரீ. உப. வித்வான், தில்லையம்பூர், சக்ரவர்த்தியாசாரியர், ஸ்ரீ வெங்கடாசாரியர் ஸ்வாமிகளிடம் முறையே ந்யாயம், வ்யாகரணம் க்ரந்த காலக்ஷேபங்களும் பெற்று ப்ரஜ்ஞயாஸத்ருசாகம: போல் ஜ்ஞாநாநுஷ்டான பராயிருந்து ஸ்ரீ அஹோபில மடம் 41 வது பட்டம் அலங்கரித்த வைராக்யநிதி ஸ்ரீவண் சடகோப ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹ சடகோப யதீந்திர மஹாதேசிகன் திருவுள்ளம் பற்றி காலக்ஷேபாதிகளில் அந்வயித்த இவரை குளிர கடாக்ஷித்து அக்காலத்தில் ஸ்வநியமன பூர்வகம் வடுவூரில் ப்ரதிஷ்டித்த ஸ்ரீமடத்தில் திருவாராதனாதிகளை இவரிடம் நியமித்தாயிற்று. ஷை திருவாராதனம்வைகரி ஆச்சர்யாவஹமும் அதிச்ரத்தையுடனும் எல்லோரும் வியக்கும் வகை யிருந்தது. ஷை ஸ்ரீ அழகிய சிங்கரிடமே ந்யஸ்தபாராய் ஆராதனாதிகளிலும் கர்மானுஷ்டானங்களிலும் ஈடுபட்டு வந்தது ப்ரஸித்தம். இவையாவும் பின் ஸ்ரீ அஹோபிலமடம் 42வது பட்டமூர்த்தாபிஷிக்தமஹோதார ஸ்ரீவண்சடகோப ஸ்ரீ ஸ்ரீரங்க சடகோப யதீந்திர மஹாதேசிகன் திருச்செவி கோசரமாக அவரும் ஸ்ரீ ராமபத்ராசாரியரை மிக ஆதரத்துடன் கடாக்ஷித்து நியமாதி புஷ்ட அநுஷ்டான, ஆராதன, ஜ்ஞானங்களையும் தன் னடக்கத்தையும் போற்றி ஸ்ரீ அஹோபில மடம் ஸந்நிதி திருவாராதன கைங்கர்யத்தில் இவரை நியமித்தருளினார். சைசவாவஸ்தையிலேயே அங்குரித்த விக்ரஹ ஆராதன ஈடுபாடு கனவு நினைவானதுப்போல் லபித்து அகமகிழ்ந்து ஆகாதிசயத்துடன் ஆராதித்து வந்து அதையே ஆதேஹபாதம் அவிச்சின்னமாக அநுஷ்டித்துவர அவாக்கொண்டு தீக்ஷித்திருந்தார். என்னே சரண்யனின் ஜன்மாந்தர கர்ம சேஷவசமான ஸங்கல்ப விசித்ரம்! சில மாதங்கள் முன் தன் பாதத்தில் ஏற்பட்ட வ்யதை யுள்ள சிறு புண்ணை அனுஷ்டானாதி வசங்கதராய் உதாஸீனம் செய்ய நேர அது

வினைகொண்டு வினைப்பயனுய் சஸ்த்ரசிகித்ஸை ஏற்பட்டு அநிவார்யமாய் ஜாங்வோரத; சேதம் செய்யப்பெற்று கமநாத்யசக்தராய் ஆறு ஞாத்துயரான ஆராதன விச்சேதத்துடன் மனம் உடைந்து தன் கிராமம் (வடுவூர்) திரும்பினர். மாலோலனது விச்லேஷத்தால் மனம் நாளடைவே கறைந்து கூவிக்கொள்ளும்காலம் குறுக ப்ரார்த்தித்து வந்தார்.

ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகன் உத்ஸவத்தில் விசேஷமான 6-வது திருநாள் 'திவ்யதம்பதி விவாஹம்' என்ற ப்ரௌடவிஷயம் சீரிய ஸம்ப்ரதாயஸூக்ஷ்மார்த்தங்களுடன் அத்புதமாக உபந்யஸித்தது ஸப்பரஞ்ஜகமாய் அன்று அநுபவித்தோம். இனியும் இம்மாதிரியான ப்ரக்ருதங்களிலும் அவர் இருப்பிடம் அணுகி அர்த்திப்போருக்கு அநர்கமான ஆத்மஜ்ஞாநம் அடைய வழி உண்டு என்று எண்ணிய என்போல்வார் எண்ணமும் ஏமாற்றத்தில் முடிந்தது.

சுருங்கச் சொல்லின் ஸ்ரீ ராமபத்ராசாரியர் ஹார்த்தமான அநுஷ்டாதா; டம்ப மானவர்ஜிதர்; அறிந்தும் பாலன் போன்ற தோற்றமுடைய ஸுலபர். பகவத்பாகவதாராதன குதூஹலீ; 'புத்ர: ப்ரேஷ்யஸ் ததா சிஷ்ய:— நிவேதயேத்' என்று தன்போல் புத்ராதிகளை பகவத்பாகவதாராதனதிகளிலும் தேவுமற்றறியேன் என்று அதனிலும் சீரிய ஆசார்ய கைங்கர்யங்களிலும் மனமுவந்து ஈடுபடுத்தியுள்ள பெருமை அவருடையதே. 41-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கர் காலம் முதல் இன்றைய வரை ஸ்ரீ அழகியசிங்கர்களின் பூர்ணநுக்ரஹம் பெற்றவர். வயது 53 ஆன இவர் த்ருடமான வேதாந்தஜ்ஞானத்துடன் ஸ்ம்ருத்யாதிகளில் அசைக்கமுடியாமல் ஸ்தாபிக்க வல்ல ஆழ்ந்த ஜ்ஞானமுள்ளவர். இவரது மறைவு இறைவன் இச்சாதீனமாயினும் இக்காலத்தில் ஈடு செய்ய இயலாத ஸமூஹ நஷ்டம். 'தஸ்மாதபரிஹார்யேர்த்தே ந த்வம் சோசிதுமர்ஹஸி' என்று ஶரண்யன் சொற்கொண்டு ஶரண்யனது ஸங்கல்பத்தையறிந்து கறையாது தேறியிருக்க ப்ராப்தம்.

T. S. சேஷாத்ரி தாஸன்,
தில்லைஸ்தானம்.

125-வது பக்கம் ஸஞ்சாரக்ரமத்தின் தொடர்ச்சி:—

இதுவரையில் ஜீப், டிரெயிலர், லாரிகளைக் கொண்டு அவ்வப்போது அவசியமாக வேண்டிய சௌகர்யங்களைச் செய்துவந்துகொண்டிருந்தார்கள். மேற்கொண்டும் டில்லி போகும் வரையில் ஜீப், டிரெயிலரை அனுப்பிவைப்பதாகவும் அதை ஸ்ரீஸந்நிதியிலேயே உபயோகப்படுத்திக்கொள்ளலாமென்றும் அவர்கள் சொல்லியனுப்பினதை அப்படி உங்களுக்கு ஸௌகர்யமிருந்து எப்போது அனுப்பி வைத்தாலும் உங்களுடைய பிரார்த்தனையின் பேரில் உபயோகப்படுத்திக்கொள்வதாக ஸாதிக்கும்படியிருந்தது. 22உ சனிக்கிழமை ராத்திரி புறப்பட்டு 17 மைல் தூரமுள்ள கிஷன்கார் எழுந்தருளினர். மறுநாளும் அவ்விடமே எழுந்தருளியிருக்கும்படி நேர்ந்தது. 24உ திங்கட்கிழமை ராத்திரி புறப்பட்டு 15 மைல் தூரத்திலுள்ள தாந்திரீக்கு எழுந்தருளினர். 25உ ராத்திரி புறப்பட்டு 10 மைலிலுள்ள துாதி என்கிற ஊருக்கு எழுந்தருளினர். 26உ ராத்திரி புறப்பட்டு மோஹன் பூரா என்ற ஊருக்கு எழுந்தருளினர். 27உ புறப்பட்டு 10 மைல் தூரத்திலுள்ள பாஹூரா என்கிற ஊருக்கு எழுந்தருளினர். 28உ ராத்திரி புறப்பட்டு பக்ரோடா என்கிற 10மைல் தூரத்திலுள்ள கிராமத்திற்கு எழுந்தருளினர். 29உ ராத்திரி புறப்பட்டு ஜெய்ப்பூர் எழுந்தருளினர். 30உ ந்ருஸிம்ஹஜயந்தி அவ்விடம் நடந்தது. பெரிய பெருமாளுக்கும் கண்ணனுக்கும் திருமஞ்சனம் நடந்தது. ஸ்ரீபாகவதம் ஸேவிக்கப்பட்டு ஹிந்தியில் ஸங்க்ரஹமாக ஸ்ரீ அழகியசிங்கர் அர்த்தம் ஸாதிக்கும்படியிருந்தது. மறுநாள் ஸ்வாதி திருமஞ்சனம் நடந்தது. ஸ்ரீ அழகியசிங்கர் திருமுடி விளக்கத்திற்காக மலை மேலுள்ள காலவகுண்டத்திற்கு எழுந்தருளி திருமுடி விளக்கமாகி நீராட்டம் ஆயிற்று. ராத்திரி க்ரஹணத்திற்கும் அவ்விடமே எழுந்தருளி நீராட்டம் ஆயிற்று. ஜெய்ப்பூர் வாஸிகள் 3 நாள் ஆராதித்தார்கள். வைகாசி 1உ ராத்திரி புறப்பட்டு தாண்ட் என்கிற 14 மைல் தூரத்திலுள்ள கிராமத்திற்கெழுந்தருளியாயிற்று. ஆல்வார் வழியாக கோவர்த்தனம், பிருந்தாவனம், மத்ரா எழுந்தருளுகிறார்.

(தொடரும்)

ஸ்ரீ:

பஞ்சாங்கஸங்க்ரஹம்

[ஹேமலம்பி ஸூ உத்தராயணம் - வஸந்தருது வ்ருஷப மீ 1957 மே - ஜூன் மீ]

14-5-57	வைகாசி மீ 1உ	செவ்வாய்க்கிழமை	வ்ருஷபரவி, 11-3 விஷ்ணுபதி ஸங்க்ரமண தர்ப்பணம், சூன்யதிதி.
15-5-57	2உ	புதன்கிழமை	வ்ருஷபக்ருஷ்ண த்விதியை திதி.
21-5-57	8உ	செவ்வாய்க்கிழமை	அவிட்டம் 27-வது பட்டம் ஸ்ரீவீரராகவ வேதாந்தயதீந்த்ரமஹாதேசிகன் திருநக்ஷத்ரம்.
22-5-57	9உ	புதன்கிழமை	நவமி திதி.
23-5-57	10உ	வியாழக்கிழமை	அதிதி.
24-5-57	11உ	வெள்ளிக்கிழமை	தசமி திதி.
25-5-57	12உ	சனிக்கிழமை	ஏகாதசி.
27-5-57	14உ	திங்கட்கிழமை	பரணி, 39-வது பட்டம் ஸ்ரீபராங்குசயதீந்த்ர மஹாதேசிகன் திருநக்ஷத்திரம்.
28-5-57	15உ	செவ்வாய்க்கிழமை	போதாயன அமாவாஸ்யை.
29-5-57	16உ	புதன்கிழமை	● அமாவாஸ்யை
31-5-57	18உ	வெள்ளிக்கிழமை	த்விதியை, த்ருதியை திதித்வயம்.
1-6-57	19உ	சனிக்கிழமை	சதுர்த்தி திதி.
8-6-57	26உ	சனிக்கிழமை	ஏகாதசி.
10-6-57	28உ	திங்கட்கிழமை	விசாகம், நம்மாழ்வார், 7-வது, 10-வது பட்டம் ஸ்ரீ சடகோப யதீந்த்ர மஹாதேசிகர்கள் திருநக்ஷத்திரம்.
12-6-57	30உ	புதன்கிழமை	○ பூர்ணிமை திதி. கேட்டை, 35-வது பட்டம் ஸ்ரீ ரங்கநாத யதீந்த்ர மஹாதேசிகன் திருநக்ஷத்திரம்.
13-6-57	31உ	வியாழக்கிழமை	வ்ருஷப க்ருஷ்ண ப்ரதமை திதி.
14-6-57	32உ	வெள்ளிக்கிழமை	மிதுந ரவி, 35-15. ஷடசீதி, ஸங்க்ரமண தர்ப்பணம். சூன்யதிதி.

[உத்தராயணம், க்ரீஷ்மருது, மிதுந மீ]

15-6-57	ஆனிமீ 1உ	சனிக்கிழமை	சூன்யதிதி.
16-6-57	2உ	ஞாயிற்றுக்கிழமை	சூன்யதிதி.
21-6-57	7உ	வெள்ளிக்கிழமை	உத்திரட்டாதி, 23-வது பட்டம் ஸ்ரீவீரராகவ யதீந்த்ர மஹாதேசிகன் திருநக்ஷத்திரம்.
24-6-57	10உ	திங்கட்கிழமை	ஏகாதசி வ்ரதம்.
27-6-57	13உ	வியாழக்கிழமை	● அமாவாஸ்யை.
28-6-57	14உ	வெள்ளிக்கிழமை	திருவாதிரை, 9-வது பட்டம் ஸ்ரீமந்நாராயண யதீந்த்ர மஹாதேசிகன் திருநக்ஷத்ரம்.

ஸ்ரீ:

"விண்ணுலகு விடுத்து மண்ணுலகடைந்த மாயவன்"

ஸ்ரீய:பதியான ஸர்வேச்வரன் துஷ்டநிக்ரஹம் செய்து சிஷ்டர்களைப் பரிபாலிக்கக் கருதிப் பல அவதாரங்கள் எடுத்தனன். அவை மத்ஸ்ய, கூர்ம, வராஹ, ந்ருஸிம்ஹ, வாமன, பரசுராம, ராம, பலராம, க்ருஷ்ண, கல்கி எனப் பத்தவதாரங்களாகக் கணக்கிடப்பட்டுள்ளன. பெரியோர்களால் அவற்றுள் மிக உயர்ந்ததாகக் கருதப்படுவது கிருஷ்ணாவதாரமாகும். கண்ணன் பிறந்தான். மாதேவி மகிழ்ந்தாள். கண்ணனது லீலைகளைக் கண்டு விண்ணோர் வியந்தனர்; கன்னிகைகள் களித்தனர்; ஆனால் அசுரர்கள் அழுதனர், அழிந்தனர்; அமரர்கள் ஆனந்தக்கண்ணீர் சொரிந்தனர். வைகுந்தன் வைகுண்டத்தில் இருக்கும்பொழுது மாதேவி மகிழ்ச்சி கொள்ளவில்லையா? ஆம், கொள்ளவில்லை. அசுரர்களாகிய பர்வதங்களால் பாதிக்கப்படுகின்ற மாதேவியின் மகிழ்ச்சிக்கு இடமேது?

இனி மாதேவியை மகிழ்விக்க விண்ணுலகை விடுத்து மண்ணுலகையடைந்த கண்ணனது கதையாகிற கரும்பின் மிகச் சிறியதொரு பாகத்தைச் சுவைத்து இன்புறுவோம். கம்ஸனைப் போன்ற கணக்கற்ற கடும் நெஞ்சினர், நல்லோர்களை நடுங்கவைக்கும் புல்லியர்கள் உலகில் அதிக இடம் பெற்றுவிட்டனர். அவர்களின் பாரமாகிற படுந்துயரைப் பொறுக்க மாட்டாத பூமிதேவி, தங்கம்போல் தகதகவெனப் பிரகாசித்துப் பார்ப்பவர் மனதைப் பறிக்கும் நிலையில் தோற்றமளிக்கும் மேருமலையின் நடுவே வீற்றிருக்கின்ற நான்முகன் முதலிய தேவர்களை நோக்கி நான்முகனே! தர்மத்தைத் தலைத்தூக்காவண்ணம் தகர்ந்தெறியும் தூர்த்தர்களைச் சுமப்பது மிகவும் கஷ்டமாக இருக்கிறதே, எனது இத்துயரைப் போக்கலாகாதா என இறைஞ்சினள். அன்னையே! தங்கள் செய்தியைக் கேட்டுத் தீராத்துயரங்கொண்டோம். ஆனால் தங்கள் துயரைப் போக்க நானோ, தேவர்களோ வல்லவரல்லோம். ஆயினும் நாமெல்லோரும் ஒன்றுகூடி நாராயணனை நாடி வழிகாணுவோமென உரைக்க அனைவரும் ஒன்றுகூடி சென்று பாற்கடலுள் பையத்துயின்ற பரமனடி பணிந்துத் தங்கள் உய்யவேண்டிய வழியை உரைக்குமாறு ப்ரார்த்தித்தனர். எம்பெருமானும் சரணடைந்தோரைக் காப்பதையே வ்ரதமாகக் கொண்டவனாகையால் தேவர்களை நோக்கி நீங்கள் என்னைச் சரண் அடைந்துவிட்டீர்கள். இனி உங்களுக்குப் பரிபவம் நேராது. அசுரப் படைகளினின்றும் பயப்படவேண்டாம். நான் பூமியில் அவதரிக்கிறேன். நான் அவதரித்து அசுரர்களை அழித்துப் பூபாரத்தைக் குறைத்து ஸநாதன தர்மத்தையும் நிலைநிறுத்தப்போகிறேன். நீங்கள் இன்புறும்நாள் விரைவிலேயே வரவிருக்கிறது. சென்று வாருங்கள். ஆனால் ஒன்றுமட்டும் மறவாதீர்கள். பூமண்டலத்தில் அசுரர்களாகிற மான்கள் நிறைந்திருக்கின்றன. நீங்களும் அரசவேடம் பூண்டு அம்மான்களை வேட்டையாடத் தயாராக இருக்கவேண்டும். ஆகவே நீங்களும் அவனியில் அரசகுலத்தில் பிறக்கவேணும்' என ஆஜ்ஞாபித்துப் பாற்கடலில் பள்ளிகொண்ட பரமனும் மதுராபுரியில் அவதரிக்க மனம் பூண்டான்.

இவ்வாறிருக்க, கம்ஸன் என்ற அசுரன் தனது தங்கை தேவகியைச் சந்திரவம்சத்தில் பெரும் புகழுடன் விளங்கிய வசுதேவர் என்பாருக்கு மணம் முடித்து இன்புற்றிருந்தனன். அன்று மாலை தனது தங்கை தேவகியோடும், வசுதேவரோடும் ரதத்தில் அமர்ந்து சென்றுகொண்டிருந்தனன். அவ்வமயம்

'यामेनां वहसे मूढ सह भर्त्रा रथे स्थिताम् ।
अस्यास्त्वष्टमो गभः प्राणानपहरिष्यति ॥

மூடா, கணவனுடன் கூடிய கருங்குழலாளைக் குதூஹலத்துடன் ரதத்திலமர்த்தி அழைத்துச் செல்கிறாய். ஆனால் இவள் வயிற்றில் எட்டாவதாகப் பிறக்கும் குழந்தை உனது உயி

ளை உதிஞ்சப்போகின்றான்' என்ற அசரீரியைக் கேட்கவே அன்பின் அடையாளமான அன்னார்களைச் சிறையில் வைத்தனன். சில நாட்கள் கடந்தன.

अथ सितरुचिलग्ने सिद्धपंचग्रहोच्चे
व्यजनयदनघानां वैजयन्त्यां जयन्त्याम् ।
अखिलभुवनपद्मक्लेशनिद्रापनुत्यै
दिनकरमनपायं देवकीपूर्वसंध्या ॥

இரவில் கண்மூடித் தலைவணங்கியிருக்கும் தாமரை மலர்களின் துயரை நீக்கக் காலைவேளைக் கதிரவனைக் கொடுக்குமாப்போலே, பாராகிறப் பூவின் (தாமரை) படுதுயரைப் போக்கத் தேவகி என்ற ஸந்த்யாகாலம், அஸ்தமனம், ராகுவாய்ப்புகுதல் முதலிய ஆபத்துக்களை உடைத்தாகாத பகலோனைப் பரிசாக அளித்தது. அக்கதிரவனும் ரோஹிணியுடன் கூடிய ஆவணித்திங்கள் கிருஷ்ணாஷ்டமியில், சந்திரன், குஜன், புதன், குரு, சனி என்ற ஐந்து க்ரஹங்கள் உச்சமாக இருக்க வ்ருஷப லக்னத்தில் உதித்தனன். 'पंचोच्चो लोकनायकः' என்பதை யொக்க உலகத்தின் நாயகனாகவும் இருந்துவந்தனன்.

விச்வரூபியான விஷ்ணுவே அவதரித்ததால் திருவாழி, திருச்சங்கு, வனமாலை இவைகளைப் பெற்றிருப்பதில் என்ன விநோதம்? ஆயுதங்களைத் தரித்து அன்னையின் மடியில் ஆனந்தத்துடன் இருக்கும் குழந்தையைக் கண்ட வசுதேவர், 'ஸாக்ஷாத் எம்பெருமானன்றோ அவதரித்திருக்கிறார். என்னே நாம் செய்த புண்ணியம்' எனக்களிப்புகொண்டு கம்ஸன் இதை அறிந்தால் ஆபத்து நேரிடுமே என க்லேசத்தையும் அடைந்தார். உடனே குழந்தையை நோக்கி 'प्रणिपतामि भवन्तमनन्यधीरखिलकारणमाश्रिततारणम्' அடைக்கலம் புகுந்தோருக்கு அபயமளிப்பவரும், அனைத்துக்கும் மூலகாரணமுமான தங்களிடம் மனது செலுத்திப் பக்தி பூண்டு ஸாஷ்டாங்கமாக நமஸ்கரிக்கிறேன். தங்களைப் பெற்றதால் நான் பெரும் புண்யசாலியானேன். ஆனால் தாங்கள் மானிடப்பிறவிக்கொவ்வாத இவ்வேடம் பூண்டு என் என்னைப்பயமுறுத்துகின்றீர்கள்? தங்களுடன் உண்டான ஆயுதங்களையும், ஆபரணங்களையும் அகற்றி எனது பயத்தைப் போக்கியருளுங்கள்' என வேண்டிக்கொண்டார். அதைக் கேட்ட அக்குழந்தைப் புன்முறுவலோடு தகப்பனாரான வசுதேவரைக் குறித்து 'தாத! உமது மதுரமான மொழிகளைக் கேட்டு மகிழ்கிறேன். ஆண்டவன் அவதரித்து அருள் புரியும் நாளை அடைய ஆவல் கொள்கின்றனர் அமரர்கள். நல்லோர்களும் நாராயணனைக் கண்டு களிக்கும் நாட்களை நாடி இருக்கின்றனர். ஆனால் என்னைப் பெற்றத் தாங்களோ என் பகவானைப் பெற்றெடுத்தோமென எக்கங் கொள்கின்றீர்கள். என்னே விசித்திரம்! ஆயினும் தங்களுக்குப் பயமாக இருப்பின், நான் மானிடக் குழந்தைபோல் மாறிவிடுகிறேன். இப்பொழுது நந்தகோபருக்கு ஓர் பெண் குழந்தை பிறந்திருக்கிறது. என்னை விரைவில் அவருடைய வீட்டில் விட்டுவிட்டு, அப்பெண் குழந்தையைத் தாங்கள் கொண்டுவந்து வைத்துக்கொள்ளுங்கள். நான் வெகுதூரம் சென்றபிறகுத் தாங்கள் பயமற்றிருக்கலாம். ஆனால் நானும் தங்கள் ஆபத்தை அறவே அகற்ற அரும்பாடு படுவேன்' எனக் கூறியது. விண்ணுலகுவிடுத்து மண்ணுலகடைந்த மாயவன் ஒருத்தி மகனாய்ப் பிறந்து ஓரிரவில் ஒருத்தி மகனாய் ஒளித்துவளரஸங்கல்பித்தான். வசுதேவரும், அக்குழந்தையை எடுத்துக்கொண்டு ஆயிரந் தலை கொண்ட ஆதிசேஷன் குடையாயிருக்க, கருடாழ்வானும் தனது இறக்கைகளாலே இரவில் திரிந்துவரும் அசுரர்களை அகற்ற அதிகதூரத்தையும் விரைவிலே கடந்து நந்தகோபனுடைய வீட்டில் குழந்தையை விட்டுவிட்டு அங்குள்ளப் பெண் குழந்தையை ஒருவருமறியாவண்ணம் எடுத்து வந்துவிட்டனன்.

Let not your automobile
be stranded for want of
any spares at any time

THE BANGALORE AUTOMOBILES

DIRECT IMPORTERS

Trichy Road, Salem - 1.

Post Box No. **13** *Grams*: **SPARES:** *Phone:* **112.**

BIGGEST IMPORTERS
of Parts and Accessories of
all Popular Cars and Trucks

SPECIALISTS
IN
**PERKINS DIESEL
ENGINES
&
PARTS**

Regd. No. M. 4437.



போன் நெ. 112.

காஞ்சீபுரத்தில் கலியாண பட்டு ஜவுளிகள்
வாங்க நம்பிக்கையான இடம்
புதிய ஜவுளிக்கடை

***

ஸ்ரீ லக்ஷ்மி விலாஸ்

A. விசுவநாத முதலியார் & சன்,

184. காந்தி ரோடு, காஞ்சீபுரம்

இந்தியன் பாங்க், லிமிடெட்

(ஸ்தாபிதம் : 1907.)

தலைமை ஆபீஸ் : "இந்தியன் பாங்க் பில்டிங்ஸ்", வடக்கு பீச் ரோடு,
மதராஸ்-1.

தென் இந்தியாவில் முழுவதிலும், பம்பாய், கல்கத்தா, புது டில்லி, கொழும்பு, சிங்கப்பூர், F.M.S. முதலிய இடங்களில் கிளை ஆபீஸ்கள் இருக்கின்றன.

மூலதனம்

அங்கீகரிக்கப்பட்டது	...	ரூ.	1,00,00,000
வழங்கப்பட்டது	...	ரூ.	72,00,000
செலுத்தப்பட்டது	...	ரூ.	63,83,130
ரிசர்வ் & இதர நிதிகள்	...	ரூ.	79,75,000
டெபாஸிட்டுகள் (31-12-56-ல்)	...	ரூ.	32·56 கோடிகள்

எல்லாவிதமான பாங்கிங் அலுவல்களும் கவனிக்கப்படும்.

D. P. பார்த்தசாரதி, B.A. (Hons), B.L., செக்ரெட்ரி.